# பள்ளிக் கல்வித்துறை

## முதன்மைக் கல்வி அலுவலர்

## சென்னை மாவட்டம்

தமிழ்த்துகள்

## பத்தாம் வகுப்பு

## தமிழ்ப்பாடம்

## கற்றல் கையேடு

## (வினா – விடை)

## 2022 – 2023

உலகின் மூத்த மொழியாம் தமிழின் பல்வேறு பரிமாணங்களை

இன்றைய இளம்தலைமுறைக்கு அறிமுகப்படுத்தும் ஒரு

துணைக்கருவியான தமிழ்ப்பாடநூலின்

**எளிய வினா – விடை வழிகாட்டி இக்கற்றல் கையேடு!**

## உருவாக்கம்

## தமிழாசிரியர்கள்

**திருமதி ஜோ. பிரேமா கிறிஸ்டி**

டி. இ. எல். சி. மகதலேனாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி

புரசைவாக்கம், சென்னை –7

**திரு.ந.தாயுமானவன்**–தலைமையாசிரியர்

ஆர். கே. எம். உயர்நிலைப் பள்ளி

மயிலாப்பூர், சென்னை –4

**திருமதி செ. பிரமிளா**

பி. டி. மிஷன் உயர்நிலைப் பள்ளி

பார்க் டவுன், சென்னை – 3

**திரு.க. விஜயகுமார்**

சென்னை மேல்நிலைப் பள்ளி

பட்டேல் நகர், சென்னை – 81

**திருமதி க. ஜீவராணி**–தலைமையாசிரியர்

அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி

தி. நகர், சென்னை – 17

# முகவுரை

பத்தாம் வகுப்பு அரசுப்பொதுத்தேர்வை எதிர்நோக்கியிருக்கும் மாணவர்களுக்குத் தமிழ்ப்பாடத்தின் வினா– விடை வழிகாட்டியாகவும் பொதுத் தேர்வு வினாத்தாள் குறித்த விளக்கத்தை முழுமையாக விளக்கும் படியாகவும் இக்கற்றல் கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. அரசுப் பொதுத்தேர்வில் தமிழ்ப்பாடத்தில் மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சியடைவதற்கு இக்கற்றல் கையேடு துணைபுரியும்.

தமிழ்த்தேர்வு குறித்த அச்சத்தைப் போக்கி, ஆர்வத்தோடு விரும்பிப் படிப்பதற்கு வழிகாட்டும்படியாக வினாக்களும் எளிய முறையில் அவற்றிற்கான விடைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயனளிக்கக் கூடிய இக்கற்றல் கையேட்டை உருவாக்க உற்சாகமும் ஊக்கமும் அளித்த சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றி!

இந்தக் கற்றல் கையேட்டைப் பயன்படுத்தி, தன்னம்பிக்கையோடு பொதுத்தேர்வை எதிர்கொள்ளும் மாணவர்கள் அனைவருக்கும்

**பாராட்டுகளும்! வாழ்த்துகளும்!**

**விடாமுயற்சியும் முறையான பயிற்சியுமே வெற்றிக்கான படிகள்!!!**

**அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்**

**பெருமை முயற்சி தரும் – திருக்குறள்.**

**பொருள் :** ஒரு செயல் முடிப்பதற்கு இயலாதது என்று எண்ணிச் சோர்வு அடையாதிருக்க வேண்டும். அச்செயலை முயற்சியுடன் முடிப்பது பெருமை தரும்.

## உள்ளடக்கம்


| வ.எண் | பகுதிகள் | வினா வகை – வினாக்கள் எண்ணிக்கை | பக்க எண் |
|---|---|---|---|
| 1 | | குறிப்புகள், பொதுவான வினாத்தாள் அமைப்பு முறை | 5 – 6 |
| 2 | 1 மதிப்பெண் | உரைநடை : 14 செய்யுள் : 30<br>இலக்கணம் : 10<br>மொழிப்பயிற்சி : 8<br>**மொத்தம் : 62** | 7 – 16 |
| 3 | 2 மதிப்பெண் | உரைநடை : 10 செய்யுள் : 21<br>இலக்கணம் : 23<br>மொழிப்பயிற்சி : 31<br>**மொத்தம் : 85** | 16 – 31 |
| 4 | 3 மதிப்பெண் | உரைநடை : 13 செய்யுள் : 14<br>இலக்கணம் : 9<br>**மொத்தம் : 36** | 31 – 41 |
| 5 | 5 மதிப்பெண் | செய்யுள் : 6<br>மொழிப்பயிற்சி : 10<br>**மொத்தம் : 16** | 41 – 51 |
| 6 | 8 மதிப்பெண் | உரைநடை : 3<br>துணைப்பாடம் : 4<br>பொதுக்கட்டுரை : 2<br>**மொத்தம் : 9** | 51 – 60 |
| 7 | **மொத்த வினாக்கள்** | **208** | தமிழ்த்துகள் |

## குறிப்புகள்

## பொதுத்தேர்வில் தேர்ச்சியடைவதற்கு இன்றியமையாத பகுதிகள்

- ✓ கொடுக்கப்பட்டுள்ள ஒரு மதிப்பெண் வினா – விடைகள்
- ✓ குறுகிய வினா – விடைகள் , கலைச்சொல், பகுபத உறுப்பிலக்கணம், விடைக்கேற்ற வினாக்கள், திருக்குறள் பகுதிகள்.
- ✓ உரைப்பத்தி, மனப்பாடப் பகுதி மற்றும் கற்றல் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள சிறுவினாக்கள்.
- ✓ கடிதம், படம், படிவம், நிற்க அதற்குத் தக.
- ✓ கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள நெடுவினாக்கள். (செய்யுள், உரைநடை, விரிவானம், பொதுக்கட்டுரை)

## 10ஆம் வகுப்பு – தமிழ்

## பொதுவான வினாத்தாள் அமைப்பு முறை

- ➢ நேரம் – 3 மணிநேரம்
- ➢ மொத்த மதிப்பெண்கள் – 100
- ➢ வினாக்கள் – 45

ஐந்து பகுதிகள் – I, II, III, IV, V – (1, 2, 3, 5, 8 மதிப்பெண்கள்)

- ➢ பகுதி – I : (15) 1 மதிப்பெண் வினாக்கள் – 15 மதிப்பெண்கள்
- ➢ பகுதி – II : (9) 2 மதிப்பெண் வினாக்கள் – 18 மதிப்பெண்கள்
- ➢ பகுதி – III : (6) 3 மதிப்பெண் வினாக்கள் – 18 மதிப்பெண்கள்
- ➢ பகுதி – IV : (5) 5 மதிப்பெண் வினாக்கள் – 25 மதிப்பெண்கள்
- ➢ பகுதி – V : (3) 8 மதிப்பெண் வினாக்கள் – 24 மதிப்பெண்கள்

பகுதி : I (ஒரு மதிப்பெண் வினாக்கள்)

**வினா எண் 1 –15 (அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்)**

**மொத்த மதிப்பெண்கள் : 15 (பலவுள் தெரிவு ) 15 x 1 = 15**

- ✓ உரைநடை: 3, செய்யுள் : 2, இலக்கணம் : 3, மொழிப்பயிற்சி : 3, செய்யுள் பாடல் : 4 (12, 13, 14, 15).

பகுதி : II – இரண்டு பிரிவுகள் (2 மதிப்பெண் வினாக்கள்)

**மொத்த மதிப்பெண்கள் – 18**

**மொத்த வினாக்கள் – 13 (16 – 28 வரை) – குறுகிய விடைகள்**

பிரிவு : 1 வினா எண் 16 – 21 4 x 2 = 8

- ✓ செய்யுள், உரைநடை (குறுவினாக்கள், விடைக்கேற்ற வினாக்கள், திருக்குறள்) கொடுக்கப்பட்ட 6 வினாக்களில் எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விடை எழுத வேண்டும். (திருக்குறள்) 21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

பிரிவு : 2 வினா எண் 22 – 28 5 x 2 = 10

- ✓ (இலக்கணம் – குறுவினா அமைப்பு, மொழிப்பயிற்சி, பகுபத உறுப்பிலக்கணம், கலைச்சொற்கள்) கொடுக்கப்பட்ட 7 வினாக்களில் எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடை எழுத வேண்டும்.

பகுதி : III (மூன்று பிரிவுகள்) மூன்று மதிப்பெண் வினாக்கள்

(மொத்த மதிப்பெண்கள் – 18)

29 – 37 வரை மொத்த வினாக்கள் – 9

பிரிவு : 1 வினா எண் 29 – 31 2 x 3 = 6

- ✓ (உரைநடைப் பகுதி சிறுவினாக்கள், உரைப்பத்தி) கொடுக்கப்பட்ட 3 வினாக்களில் எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்

பிரிவு : 2 வினா எண் 32 – 34 2 x 3 = 6

- ✓ (செய்யுள் பகுதி) கொடுக்கப்பட்ட 3 சிறுவினாக்களில் எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும். (மனப்பாடப் பகுதி) 34ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

பிரிவு : 3 வினா எண் 35 – 37 2 x 3 = 6

- ✓ (இலக்கணப் பகுதி – சிறுவினாக்கள், அணி, அலகிடுதல்) கொடுக்கப்பட்ட 3 வினாக்களில் எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.

பகுதி : IV வினா எண் 38 – 42 5 x 5 = 25

5 மதிப்பெண் வினாக்கள் (மொத்த மதிப்பெண்கள் – 25)

- ✓ (அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்)

38. செய்யுள் நெடுவினா – ஏதேனும் ஒன்று
39. கடிதம் – ஏதேனும் ஒன்று (உறவுமுறைக் கடிதம், அலுவலகக் கடிதம்)
40. படம் தொடர்பான வினா
41. படிவம் – ஒன்று மட்டும்
42. மொழிப்பயிற்சி – (எ.கா) நிற்க அதற்குத் தக (அ) மொழிபெயர்ப்பு ( செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்றுவினா – உரைப்பத்தி – 5 வினாக்கள்)

www.tamilthugal.blogspot.com

பகுதி : V வினா எண் 43 – 45 3 x 8 = 24

8 மதிப்பெண் வினாக்கள் – நெடுவினாகள்

43. உரைநடை – ஏதேனும் ஒன்று
44. விரிவானம் (துணைப்பாடம்) – ஏதேனும் ஒன்று
45. பொதுக்கட்டுரை – ஏதேனும் ஒன்று

## ஒரு மதிப்பெண் வினா – விடைகள் : பலவுள் தெரிக.

### உரைநடை

1. '**<u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u>**' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது –

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

**விடை : ஈ) சருகும் சண்டும்**

2. **வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை** ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை –

அ) குலை வகை ஆ) மணி வகை

இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

**விடை : ஆ) மணி வகை**

3. **செய்தி 1 :** ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

**செய்தி 2 :** காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.

**செய்தி 3 :** காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம்செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!

அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி

இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1,3 ஆகியன சரி

**விடை : ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி**

4. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ) கொண்டல் – 1. மேற்கு

ஆ) கோடை – 2. தெற்கு

இ) வாடை – 3. கிழக்கு

ஈ) தென்றல் – 4. வடக்கு

**அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2**

**விடை : ஆ) 3, 1, 4, 2**

5. '**விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீரியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான்**' என்கிறது **புறநானூறு**'. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை –

அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து

இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

**விடை : ஆ) இன்மையிலும் விருந்து**

6. தலைப்புக்கும் குறிப்புகளுக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

**தலைப்பு** : செயற்கை நுண்ணறிவு

**குறிப்புகள்** : கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது.

திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.

அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**விடை : அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.**

7. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

**விடை : ஈ) இலா**

8. **'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்'** என்னும் சின்னமனூர் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

இ) பக்தி இலக்கிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

**விடை : அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.**

9. **'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்'**– மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே–

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

**விடை : அ) திருப்பதியும் திருத்தணியும்**

10. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக **ம.பொ.சி.** கருதியது -----

அ) திருக்குறள் ஆ) புறநானூறு

இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

**விடை : ஈ) சிலப்பதிகாரம்**

11. **மேன்மை தரும் அறம்** என்பது -----

அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ் கருதி அறம் செய்வது

ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

**விடை : அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது**

12. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும்

பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் -----, -----.

அ) உதியன், சேரலாதன் ஆ) அதியன், பெருஞ்சாத்தன்

இ) பேகன், கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன், திருமுடிக்காரி

**விடை : ஆ) அதியன், பெருஞ்சாத்தன்**

13. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக **ஜெயகாந்தன் கருதுவது**

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல்.

ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்.

இ) அறிவியல் முன்னேற்றம்.

ஈ) வெளிநாட்டு முதலீடுகள்.

**விடை : ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்.**

14. **கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன்** – ஜெயகாந்தனின் இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது –

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்.

ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்.

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்.

**விடை : ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.**

## செய்யுள்

1. **"மெத்த வணிகலன்"** என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது –

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

**விடை : அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்**

2. **எந்தமிழ்நா** என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்–

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

**விடை : இ) எம் + தமிழ் + நா**

3. **"உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்**
**உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்"** – பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை

இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

**விடை : ஆ) மோனை, எதுகை**

4. **"பாடுஇமிழ் பனிக்கடல் பருகி"** என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும்

அறிவியல் செய்தி யாது?

அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

**விடை : அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்**

**5. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி"** என்னும் அடியில் பாக்கம் என்பது –

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

**விடை : ஈ) சிற்றூர்**

**6. காசிக்காண்டம்** என்பது –

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்

ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்

ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

**விடை : இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்**

**7. 'உனதருளே பார்ப்பன் அடியேனே'** – யாரிடம் யார் கூறியது?

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

**விடை : ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்**

8. பரிபாடல் அடியில் **'விசும்பும் இசையும்'** என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்

இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

**விடை : ஈ) வானத்தையும் பேரொலியையும்**

**9. அருந்துணை** என்பதைப் பிரித்தால் ---

அ) அருமை + துணை ஆ) அரு + துணை

இ) அருமை + இணை ஈ) அரு + இணை

**விடை : அ) அருமை + துணை**

**10. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி**
**மருளை அகற்றி மதிக்கும் தெருளை"**

– என்ற இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

**விடை : இ) கல்வி**

**11**. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ----- ; இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ------.

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்

இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

**விடை : ஈ) மன்னன், இறைவன்**

**12. மலர்கள் தரையில் நழுவும்.** எப்போது?

அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்

இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

**விடை : ஆ) தளரப் பிணைத்தால்**

13. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்

ஈ) அங்கு வறுமை இல்லாததால்

**விடை : ஈ) அங்கு வறுமை இல்லாததால்**

14. **'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்'** என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்–

அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

**விடை : ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்**

15. **"வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்"** இவ்வடி குறிப்பிடுவது……

அ) காலம் மாறுவதை

ஆ) வீட்டைத் துடைப்பதை

இ) இடையறாது அறப்பணி செய்தலை

ஈ) வண்ணம் பூசுவதை

**விடை : இ) இடையறாது அறப்பணி செய்தலை**

16. **காலக்கணிதம்** கவிதையில் இடம்பெற்ற தொடர் -----.

அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது

ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்

ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

**விடை : அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது**

17. **"இவள் தலையில் எழுதியதோ**
**கற்காலம்தான் எப்போதும்"**….. இவ்வடிகளில் கற்காலம் என்பது

அ) தலைவிதி ஆ) பழைய காலம்

இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது.

**விடை : ஈ) தலையில் கல் சுமப்பது.**

18. **"பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க"** என்று ----, ---- வேண்டினார்.

அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக

இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக.

**விடை : அ) கருணையன், எலிசபெத்துக்காக**

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

✓ **"உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்**

**செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த**
**அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி**
**முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!"**

19. பாடலின் ஆசிரியர்–

அ) பாரதியார் ஆ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்

இ) பாரதிதாசன் ஈ) தமிழழகனார்

**விடை : ஆ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

20. பண்புத்தொகையைத் தேர்ந்தெடுக்க.

அ) செந்தாமரை ஆ) வீசுதென்றல்

இ) உணர்வெழுப்ப ஈ) சிறகார்ந்த

**விடை : அ) செந்தாமரை**

21. **தும்பி** என்னும் சொல்லுக்கான பொருளைத் தேர்க.

அ) கனல் ஆ) உந்தி

இ) யாண்டும் ஈ) வண்டு

**விடை : ஈ) வண்டு**

22. பாடல் இடம்பெற்றுள்ள நூல் –

அ) உலகியல் நூறு ஆ) பாவியக் கொத்து

இ) கனிச்சாறு ஈ) எண்சுவை

**விடை : இ) கனிச்சாறு**

✓ **"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு**
**வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை**
**நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,**
**பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு"**

23. பாடல் இடம்பெற்ற நூல் ------

அ) சிலப்பதிகாரம் ஆ) திருவிளையாடற் புராணம்

இ) முல்லைப்பாட்டு ஈ) குறிஞ்சிப்பாட்டு

**விடை : இ) முல்லைப்பாட்டு**

24. பாடலை இயற்றியவர் ---

**அ) காரியாசான் ஆ) நல்லந்துவனார்**

**இ) நக்கீரனார் ஈ) நப்பூதனார்**

**விடை : ஈ) நப்பூதனார்**

25. **நேமி–** பொருள் தருக.

அ) முத்து ஆ) கடல்

இ) சங்கு ஈ) சக்கரம்

**விடை : ஈ) சக்கரம்**

26. பாடலில் உள்ள மோனைச் சொற்களை எழுதுக.

அ) நனந்தலை – உலகம் ஆ) நீர் – நிமிர்ந்த

இ) வலம்புரி – தடக்கை ஈ) வலம்புரி – பொறித்த

**விடை : ஆ) நீர் – நிமிர்ந்த**

✓ **"வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்**
**பூவும் புகையும் மேவிய விரையும்**
**பகர்வனர் திரிதரு நகர வீதியும்**
**பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்"**

27. பாடல் இடம்பெற்றுள்ள நூலைத் தேர்க.

அ) கம்பராமாயணம் ஆ) சிலப்பதிகாரம் இ) காசிக்காண்டம் ஈ) தேம்பாவணி

**விடை : ஆ) சிலப்பதிகாரம்**

28. பாடலின் ஆசிரியர் – www.tamilthugal.blogspot.com

அ) கம்பர் ஆ) வீரமாமுனிவர் இ) சீத்தலைச் சாத்தனார் ஈ) இளங்கோவடிகள்

**விடை : ஈ) இளங்கோவடிகள்**

29. சீர் எதுகைச் சொல்லைத் தேர்க.

அ) வண்ணமும் – இருக்கையும் ஆ) பூவும் – புகையும் இ) வண்ணமும் – சுண்ணமும் ஈ) பட்டினும் – நூலினும்

**விடை : இ) வண்ணமும் – சுண்ணமும்**

30. **காருகர்** – இச்சொல்லின் பொருளைத் தேர்க.

அ) நெய்பவர் ஆ) ஓவியர் இ) சிற்பி ஈ) வெற்றிலை விற்பவர்

**விடை : அ) நெய்பவர்**

## இலக்கணம்

1. **'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது'** – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே–

அ. பாடிய; கேட்டவர் ஆ. பாடல்; பாடிய

இ. கேட்டவர்; பாடிய ஈ. பாடல்; கேட்டவர்

**விடை : ஈ. பாடல்; கேட்டவர்**

2. **'பெரியமீசை சிரித்தார்'** – அடிக்கோடிட்ட தொடருக்கான தொகையின் வகை எது?

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

**விடை : இ) அன்மொழித்தொகை**

3. **அறிஞருக்கு நூல், அறிஞரது நூல்** ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது –

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

**விடை : அ) வேற்றுமை உருபு**

4. குலசேகர ஆழ்வார் **'வித்துவக்கோட்டம்மா'** என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார்.

பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே –

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ)இட வழுவமைதி, மரபு வழுவமைதி

இ)பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) காலவழுவமைதி, இடவழுவமைதி

**விடை : இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி**

5. **"இங்கு நகரப் பேருந்து நிற்குமா?"** என்று வழிப்போக்கர் கேட்பது ---- வினா.

**"அதோ அங்கே நிற்கும்"** என்று மற்றொருவர் கூறியது ------- விடை.

அ) ஐய வினா, வினா எதிர் வினாதல் விடை ஆ) அறிவினா, மறைவிடை

இ) அறியா வினா, சுட்டுவிடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

**விடை : இ) அறியா வினா, சுட்டு விடை**

6. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ....

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்

ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்

ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

**விடை : இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்**

**7. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ---.**

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**விடை : இ) வலிமையை நிலைநாட்டல்**

**8. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் –**

அ) அகவற்பா ஆ) வெண்பா

இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

**விடை : அ) அகவற்பா**

9. **வாய்மையே மழைநீராகி –** இத்தொடரில் வெளிப்படும் அணி –

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

**விடை : இ) உருவகம்**

10. **எய்துவர் எய்தாப் பழி –** இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?

அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்

இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

**விடை : அ) கூவிளம் தேமா மலர்**

## மொழிப் பயிற்சி

1. பின்வருவனவற்றுள் முறையான தொடர் –

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.

ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.

இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

**விடை : இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.**

2. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத் தொடர் எது?

அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்.

ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.

இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.

ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.

**விடை : இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.**

3. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?

அ) கரகாட்டம் என்றால் என்ன?

ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?

இ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை?

ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

**விடை : ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?**

4. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு

இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

**விடை : இ) உழவு, ஏர், மண், மாடு**

5. **கீரை** என்ற சொல்லின் கூட்டப் பெயரைத் தேர்க.

அ) கட்டு ஆ) குலை இ) குவியல் ஈ) தாறு

**விடை : அ) கட்டு**

6. **"ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி"** – இச்செய்யுள் அடியில் இடம்பெற்றுள்ள எண்ணுப்பெயர்களின் தமிழ் எண்ணைத் தேர்க.

அ) க000 ஆ) ங00 இ) அ00 ஈ) எ000

**விடை : அ)** க000

7. ஊர்ப்பெயர்களின் மரூஉக்களில் பொருத்தமானதைத் தேர்க.

அ) புதுக்கோட்டை–புதுவை ஆ) புதுச்சேரி–புதுகை

இ) திருநெல்வேலி–திருச்சி ஈ) கும்பகோணம்–குடந்தை

**விடை : ஈ) கும்பகோணம்–குடந்தை**

8. மரபுத்தொடருக்கான பொருளைத் தேர்க.

**ஆறப்போடுதல் –**

அ. தாமதப்படுத்துதல் ஆ. ஆற்றில் போடுதல்

இ. ஆறவைத்தல் ஈ. ஆற்றில் இறங்குதல்

**விடை : ஆ) தாமதப்படுத்துதல்**

## இரண்டு மதிப்பெண் வினா – விடைகள்

### உரைநடை

1. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.

- **அரும்பு** – பூவின் தோற்றநிலை
- **போது** – பூ விரியத் தொடங்கும் நிலை
- **மலர்(அலர்)** – பூவின் மலர்ந்த நிலை
- **வீ** – பூ கீழே விழுந்த நிலை
- **செம்மல்** – பூ வாடின நிலை.

2. தமிழ்நாட்டில் மட்டும் விளையும் **சிறுகூலங்கள்** சிலவற்றை எழுதுக.

- **வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி**

3. பின்வரும் நிலவகைகளின் பெயர்களுக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

**தரிசு** : வறண்ட நிலம், **சிவல்** : செம்மண் நிலம்

**கரிசல்** : கருமண் நிலம், **முரம்பு** : கல்லுள்ள மேட்டு நிலம்,

**புறம்போக்கு** : பயன்படாத நிலம் **சுவல்** : மேடான நிலம், **அவல்** : விளைநிலம்

4. **'நமக்கு உயிர் காற்று**
**காற்றுக்கு வரம் மரம் – மரங்களை**
**வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்'** – இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்களை எழுதுக.

- **வேண்டும்! வேண்டும்! தூய காற்று வேண்டும்!**
- **வேண்டாம்! வேண்டாம்! காற்றை மாசுபடுத்த வேண்டாம்!**

5. **'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி'** என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.

**விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றாகக் கருத முடியாது. அன்பு நிறைந்த மனமும், பகிரும் பண்பும் இருந்தால் போதும்.**

6. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

- **செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்து ஊர்திகள்,**
- **மருத்துவத்துறையில் இயந்திர மனிதன்.**

7. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் **ம.பொ.சி.** என்பதற்குச் சான்று தருக.

❖ நூல்கள் வாங்குவதற்குப் போதிய பணமில்லாததால் பழைய புத்தகங்களைக் குறைந்த விலைக்கு வாங்கினார்.

❖ உணவுக்கான பணத்தில்கூட புத்தகங்கள் வாங்கிவிட்டுப் பட்டினி கிடந்திருக்கிறார்.

8. குறிப்பு வரைக – **அவையம்.**

❖ **அவையம்** என்பது அறம் கூறும் மன்றம். நடுநிலையாகச் செயல்படும் **மன்றம்.** இம்மன்றங்கள் அரசனின் ஆட்சிக்குத் துணைபுரிந்தன. **உறையூரின் அற அவையம்** தனிச்சிறப்பானது. **மதுரை அவையம்** பற்றி மதுரைக்காஞ்சி என்னும் நூல் குறிப்பிடுகிறது.

## விடைகளுக்கேற்ற வினாக்கள் எழுதுக. (எ.கா.)

9. ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.

❖ **எதற்குத் தக்கபடி ஒரு நாட்டின் அறிவொழுக்கங்கள் அமைந்திருக்கும்?**

**10.** நூலின் பயன் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பயனுக்காக இருத்தல் வேண்டும்.

❖ **நூலின் பயன் எவற்றிற்காக இருத்தல் வேண்டும்?**

## செய்யுள்

**1. "மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!"**

**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!** – இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

www.tamilthugal.blogspot.com

❖ **சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி**

2. **வசனகவிதை** – குறிப்பு வரைக.

❖ உரைநடையும் கவிதையும் இணைந்து எழுதப்படும் கவிதை வடிவம்.

❖ யாப்பு இலக்கணக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு வரும்.

❖ தமிழுக்கு வசனகவிதை பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

3. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் **முகமன் சொற்களை** எழுதுக.

❖ **வாங்க! வாங்க! உட்காருங்க, நல்லா இருக்கீங்களா?**

❖ **தண்ணீர் குடிங்க, வீட்டில் அனைவரும் நலமா?**

**4.** பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

❖ **அழாதே தம்பி! வா விளையாடலாம்!**

❖ **இனிப்பு மிட்டாய் வாங்கித் தருகிறேன்.**

5. **'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' –** இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

- **தினைச் சோற்றை உணவாகப் பெறுவீர்.**

6. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

- **'உங்களுக்கு நோய் ஒன்றும் இல்லை'** என்பது போன்ற மருத்துவரின் அன்பான சொற்களும் **'விரைவில் நலம் பெறுவீர்கள்'** போன்ற நம்பிக்கையான சொற்களும் மருந்துடன் இணைந்து நோயைக் குணமாக்கப் பங்காற்றுகின்றன.

7. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

- **நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம்**

8. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை **முழக்கத் தொடர்களாக்குக.**

- **அருளைப் பெருக்குவோம்! அன்பை வளர்ப்போம்!**
- **கற்போம்! கற்போம்! அறிவைப் பெறுவோம்!**

9. **சதாவதானம்** என்றால் என்ன?

- **சதம்** என்றால் நூறு என்று பொருள்.
- ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களை ஒருவர் நினைவில் கொண்டு வினாக்களுக்கு விடையளிப்பது **சதாவதானம்** எனப்படும்.

10. **"கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுதுஉணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்"** – இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

- கழிந்த பெரும் கேள்வியினான் – **மன்னன் குலேச பாண்டியன்**.
- காதல்மிகு கேண்மையினான் – **புலவர் இடைக்காடனார்.**

11. **சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் –** இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

- மலர்கள், தன் இதழ்களை மெல்லிய காம்பினால் சுமக்கின்றன.
- அதைப்போன்று பெண், அவள் எதிர்கொள்ளும் சிக்கல்களை அமைதியுடனும் திடத்துடனும் எதிர்கொள்கிறாள்.

12. உறங்குகின்ற கும்பகன்ன **'எழுந்திராய் எழுந்திராய்'** காலதூதர் கையிலே **'உறங்குவாய் உறங்குவாய்'** கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

- கும்பகன்னனின் பொய்யான வாழ்வு முடிவடையத் தொடங்கிவிட்டது. அதனைக் காண்பதற்காக கும்பகன்னனை எழுப்புகிறார்கள்.
- **'காலனுக்குத் தூதரானவர் கையில் இனிமேல் படுத்து உறங்கு'** எனக் கூறிப் பின்பு உறங்கச் சொல்கிறார்கள்.

13. **பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர்** – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

| | | |
|---|---|---|
| **பாசவர்** | : | **வெற்றிலை விற்பவர்** |
| **வாசவர்** | : | **நறுமணப்பொருள்கள் விற்பவர்** |
| **பல்நிண விலைஞர்** | : | **பல்வகையான இறைச்சி விற்பவர்** |
| **உமணர்** | : | **உப்பு விற்பவர்** |

14. **மெய்க்கீர்த்தி** பாடப்படுவதன் நோக்கம் யாது?

- ❖ **புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்படும் கல்வெட்டுகளுக்கு மெய்க்கீர்த்தி என்று பெயர்.**
- ❖ **கல்இலக்கியங்களான மெய்க்கீர்த்திகளில் எழுதப்படும் மன்னர்களின் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.**

15. காலக்கழுதைக் கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

- ❖ **கவிஞர், அறப்பணியை ஓயாமல் தொடர்ந்து செய்கிறார்.**

16. **"காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்"** – உவமை உணர்த்தும் கருத்து யாது?

- ❖ இளம் பயிரானது மழைத்துளி இல்லாமல் காய்ந்து விட்டதுபோல கருணையனாகிய நானும் அன்னையை இழந்து வாடுகிறேன்.

17. **'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு'** என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?

- ❖ **வாழ்வில் தலைக்கனம்** என்று தற்பெருமையுடன் இருப்பவர்களையும்
- ❖ **தலைக்கனமே வாழ்வு** என்று சித்தாளின் தலைச்சுமையையும் குறிப்பிடுகிறார்.

18. **'நச்சப் படாதவன்'** செல்வம் – இத்தொடரில் **நச்சப் படாதவன்** என்னும் சொல்லுக்குப் பொருள் தருக

- ❖ **நச்சப் படாதவன் – விரும்பப் படாதவன்**

19. **கரப்பிடும்பை இல்லார்** – இத்தொடரின் பொருள் கூறுக.

- ❖ **தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைக்காத நல்லவர்.**

20. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?

- ❖ **இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால், இரப்பவரின் உள்ளம் மகிழும் .**

21. பின்வருவனவற்றுள் **கூரான ஆயுதம் எது** என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக. **(பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்)**

- ❖ **கூரான ஆயுதம் – "உழைத்ததால் கிடைத்த ஊதியம்".**
- ❖ அத்தகைய பொருளை ஈட்ட வேண்டும் ஏனெனில், அதைவிட பகைவரை வெல்லும் கூர்மையான ஆயுதம் வேறு இல்லை.

# இலக்கணம்

1. **'வேங்கை'** என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
   - ❖ **வேங்கை** என்பது மரத்தையும்
   - ❖ **வேம் + கை** என்று பிரிகின்ற போது **வேகின்ற கை** என்றும் குறிக்கிறது.

2. தற்கால உரைநடையில் **சிலேடை** அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
   - ❖ இசை விமர்சகர் சுப்புடு அவர்கள் ஒருமுறை பாடகர் ஒருவரின் பாடலைப் பற்றிய தமது விமர்சனத்தில், **"அன்று கச்சேரியில் பாடகரின் காதிலும் கம்மல், குரலிலும் கம்மல்"** என்று சிலேடையாக எழுதியிருந்தார்.

3. தடித்த **தொகைநிலைத் தொடர்களை** வகைப்படுத்துக.

1. **அன்புச்செல்வன்** திறன்பேசியின் **தொடுதிரை**யில் படித்துக்கொண்டிருந்தார்.
   - ❖ **அன்புச்செல்வன் : இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை**
   - ❖ **தொடுதிரை : வினைத்தொகை**

2. அனைவருக்கும் **மோர்ப்பானை**யைத் திறந்து **மோர் கொடுக்கவும்**.
   - ❖ **மோர்ப்பானை : இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை**
   - ❖ **மோர் கொடுக்கவும் : இரண்டாம் வேற்றுமைத் தொகை**

3. **வெண்டைக்காய்ப்** பொரியல் **மோர்க்குழம்புக்குப்** பொருத்தமாக இருக்கும்.
   - ❖ **வெண்டைக்காய்ப் : இருபெயரொட்டுப் பண்புத்தொகை**
   - ❖ **மோர்க்குழம்பு : மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை**

4. **தங்கமீன்கள் தண்ணீர்த்தொட்டி**யில் விளையாடுகின்றன.
   - ❖ **தங்கமீன்கள் : உவமைத்தொகை**
   - ❖ **தண்ணீர்த்தொட்டி : இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை**

4. **தண்ணீர் குடி, தயிர்க்குடம்** ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதுக, தொடரில் அமைக்க.
   - ❖ **தண்ணீரைக் குடி : நான் தண்ணீரைக் குடித்தேன்.**
   - ❖ **தயிரை உடைய குடம் : தயிரை உடைய குடத்தை எடுத்தார்.**

5. **மாஅல்** – பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.
   - ❖ **பொருள் : திருமால்**
   - ❖ **இலக்கணக்குறிப்பு : செய்யுளிசை அளபெடை**

6. **கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய கோடி உண்டாயினும் இல்** – இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.
   - ❖ **கொடுப்பதூஉம் , துய்ப்பதூஉம் : இன்னிசை அளபெடை**

7. **தஞ்சம் எளியர் பகைக்கு** – இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.

| | **சீர்** | **அசை** | **வாய்பாடு** |
|---|---|---|---|
| 1 | தஞ் / சம் | நேர் நேர் | தேமா |
| 2 | எளி / யர் | நிரை நேர் | புளிமா |
| 3 | பகைக் / கு | நிரைபு | பிறப்பு |

8. **'எழுது என்றாள்'** என்பது விரைவு காரணமாக **'எழுது எழுது என்றாள்'** என அடுக்குத்தொடரானது. **'சிரித்துப் பேசினார்'** என்பது எவ்வாறு அடுக்குத்தொடர் ஆகும்?

- **'சிரித்து சிரித்துப் பேசினார்'** என்று அடுக்குத்தொடராகும்.

9. **பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்?** ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

- **பாரதியார் கவிஞர்** – பெயர்ப் பயனிலை
- **நூலகம் சென்றார்** – வினைப் பயனிலை
- **அவர் யார்?** – வினாப் பயனிலை

10. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் – இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

- **செல்வேன்–** எதிர்காலம் , இதற்கு மாறாக **செல்கிறேன்** என்பது நிகழ்காலம்
- காரணம் : **உறுதித் தன்மையின் பொருட்டுக் கூறுவது**.

11. **"சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்"** என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் –இதில் உள்ள திணை வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

| **வழு** | **திணை வழுவமைதி** |
|---|---|
| கேட்பான் | கேட்கும் |
| கடிக்க மாட்டான் | கடிக்காது |

12. **கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.**

அ) அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார். – **கால வழுவமைதி**

ஆ) "இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அதை அனைவரும் ஏற்பர்" என்று கூறினான். – **இட வழுவமைதி**

இ) சிறிய வயதில் இந்த மரத்தில்தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம்.
**– கால வழுவமைதி**

ஈ) செல்வன், இளவேலன் இந்தச் சிறுவயதிலேயே விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்திருக்கிறார். – **பால் வழுவமைதி**

13. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**1. அறிவினா 2. அறியா வினா 3. ஐயவினா 4. கொளல் வினா**

**5. கொடை வினா 6. ஏவல் வினா** என்று வினா **ஆறு** வகைப்படும்.

14. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

விடை **எட்டு** வகைப்படும். அவை,

| | |
|---|---|
| **1. சுட்டு விடை** | **5. வினா எதிர் வினாதல் விடை** |
| **2. மறை விடை** | **6. உற்றது உரைத்தல் விடை** |
| **3. நேர் விடை** | **7. உறுவது கூறல் விடை** |
| **4. ஏவல் விடை** | **8. இனமொழி விடை** |

15. **இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? இதோ... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?** உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்து எழுதுக.

- ❖ மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? **–அறியாவினா**
- ❖ மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? **– ஐயவினா**

**16.** காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

- ❖ **முதற்பொருள்கள் :** காடு, மழைக்காலம், மாலை
- ❖ **கருப்பொருள் :** உணவு – வரகு

**17. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.**

- ❖ உழவர்கள் மலையில் உழுதனர்.

  **குறவர் மலையில் உழுதனர்.**
- ❖ முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

  **தாழை பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.**

18. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

- ❖ **வெட்சி : கரந்தை, வஞ்சி : காஞ்சி, நொச்சி : உழிஞை**

19. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி, எடுத்துக்காட்டுத் தருக?

- ❖ **வெண்பாவின் இலக்கணம் கொண்டு, இரண்டு அடிகளாய் வரும்.**
- ❖ **முதல் அடிநான்கு சீர், இரண்டாம் அடி மூன்று சீர் என்று வரும்.**

**எ.கா–** அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

**20.** வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவிற்கு உரியது. இத்தொடர்களை ஓரே தொடராக இணைத்து எழுதுக?

- ❖ **வஞ்சிப்பாவிற்குத் தூங்கல் ஓசையும் துள்ளல் ஓசை கலிப்பாவிற்கும் உரியன.**

21. தீவக அணியின் வகைகள் யாவை?

❖ **முதல்நிலை, இடைநிலை, கடைநிலைத் தீவகம்.**

22. **அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"** – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

❖ **அணி :** நிரல்நிறை அணி,

❖ **இலக்கணம்** : சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணியாகும்.

23. **"கொள்வோர் கொள்க குரைப்போர் குரைக்க உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது"** – அடியெதுகையையும் இலக்கணக் குறிப்பையும் எடுத்தெழுதுக.

❖ அடியெதுகை : **கொள்வோர் – உள்வாய்**

❖ இலக்கணக் குறிப்பு : **கொள்க, குரைக்க : வியங்கோள் வினைமுற்று**

## மொழிப்பயிற்சி

**1. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.**

| | |
|---|---|
| "தேணிலே ஊரிய செந்தமிழின்–சுவை | "தே**னி**லே ஊ**றி**ய செந்தமிழின் – சுவை |
| தேரும் சிலப்பதி காறமதை | தே**று**ம் சிலப்பதி கா**ர**மதை |
| ஊனிலே எம்முயிர் உல்லலவும்–நிதம் | ஊனிலே எம்முயிர் உ**ள்ளள**வும் – நிதம் |
| ஓதி யுனர்ந்தின் புருவோமே" | ஓதி யு**ண**ர்ந்தின் பு**று**வோமே" |

2. தொடரின் தடித்தச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளை உடைய வேறு சொற்களைப் பயன்படுத்தி, தொடரை மீள எழுதுக.

❖ **உலகில்** வாழும் மக்களில் சிலர் **கனி**யிருக்கக் காய் **புசி**த்தலைப்போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி **இன்னற்**படுகின்றனர்.

❖ **பூமியில்** வாழும் மக்களில் சிலர் **பழ**மிருக்கக் காய் **சாப்பிடுவதை**ப்போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி **அல்லல்**படுகின்றனர்.

3. **சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

(தேன், விளக்கு, விண், மணி, மழை, மேகலை, விலங்கு, செய், வான், பொன், பூ)

❖ **செய்தேன், பொன்விளக்கு, விண்மழை, மணிமேகலை, பொன்விலங்கு, செய்வான், பொன்மணி, தேன்மழை, பூமழை, பூமணி.**

4. கீழ்க்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களை எழுதுக.

**சொற்கள் – ஆடு, கல், புல், பழம்**

| சொல் | கூட்டப்பெயர் |
|---|---|
| ஆடு | மந்தை, |
| கல் | குவியல் |
| புல் | கட்டு |
| பழம் | குலை |

5. **நாற்றிசையும் செல்லாத நாடில்லை.**

**ஐந்து சால்பு ஊன்றிய தூண்.**

**நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.** செய்யுள் அடிகளில் இடம்பெற்றுள்ள எண்ணுப் பெயர்களைக் கண்டு, தமிழ் எண்ணில் எழுதுக.

- **நாற்றிசையும் செல்லாத நாடில்லை. – நான்கு : 4 – ச**
- **ஐந்து சால்பு ஊன்றிய தூண். – ஐந்து : 5 – ரு**
- **நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி. – நான்கு, இரண்டு : 4, 2 – ச, உ**

6. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றி, தொடர்களை இணைக்க.

1. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.
   - **கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.**
2. ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
   - **ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.**
3. நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
   - **நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.**
4. பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.
   - **பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித் தேர்வில் வென்றார்.**

7. குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத் தொடர்கள் அமைக்க.

- **குறளின்பத்தில்** திளைக்காத தமிழன் உண்டா?
- **சுவைக்காத இளநீரால்** பயனேதும் உண்டா?
- கம்பனின் **காப்பியச் சுவை** சுவைத்துப் படித்துள்ளீர்களா?
- **மனிதகுல மேன்மை**யை உணராதோர் உள்ளனரோ?
- **விடுமுறைநாள்** மகிழ்ச்சிக்குரியது என்று எண்ணாதோர் உண்டோ?

8. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.

**இன்சொல்** : பண்புத்தொகை – இனிமையான சொல் பேசுதல் நற்பண்பு.

**எழுகதிர்** : வினைத்தொகை – அதிகாலையில் எழுகதிர் பார்க்கலாம்.

**கீரிபாம்பு** : உம்மைத்தொகை – கீரியும் பாம்பும் சண்டை இடும்.

**முத்துப்பல்** : உவமைத்தொகை – முத்துப் போன்ற பல் அழகு சேர்க்கும்.

**பூங்குழல் வந்தாள்** : அன்மொழித்தொகை – பள்ளிக்கு பூங்குழல் வந்தாள்

**மலை வாழ்வார்** : வேற்றுமைத்தொகை – தேன் மலையின் கண் கிடைக்கும்.

**9. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.**

**(காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)**

1. முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும்; நீக்காவிட்டாலும் வாசனை தரும் : **நறுமணம்**
2. பழமைக்கு எதிரானது – எழுதுகோலில் பயன்படும் : **புதுமை**
3. இருக்கும்போது உருவமில்லை – இல்லாமல் உயிரினம் இல்லை : **காற்று**
4. நாலெழுத்தில் கண் சிமிட்டும்–கடையிரண்டில் நீந்திச் செல்லும் : **விண்மீன்**
5. ஓரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம் : **காடு**

**10. நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக.**
**(வனத்தின் நடனம், மிதக்கும் வாசம், காற்றின் பாடல், மொட்டின் வருகை, உயிர்ப்பின் ஏக்கம், நீரின் சிலிர்ப்பு)**

1. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக் காற்று வீசியது. **காற்றின் பாடல்**

2. புவி சிலிர்த்து, மண்ணிலிருந்து சின்னஞ்சிறு மொட்டு முகிழ்த்தது; அச்செடியை வரவேற்கும் விதமாகப் பக்கத்துச் செடிகள் தலையாட்டி மகிழ்கின்றன. **மொட்டின் வருகை**

3. சோலைக்குள் சத்தமில்லாமல் வீசியது தென்றல்; பூக்கள் அதன் வருகையை உணர்ந்து நறுமணத்துடன் வரவேற்கின்றன. பூவாசம் கலந்த தென்றலில் வண்டுகள் மிதந்து சென்று மலர்களில் அமர்கின்றன. **மிதக்கும் வாசம்**

4. இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள். வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம்: மழைக்கு ஏங்கும் புவி, வெப்பப் பெருமூச்சு விடும்: கசகசத்த உயிரினங்கள். **உயிர்ப்பின் ஏக்கம்**

5. நின்றுவிட்ட மழை தரும் குளிர்: சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழைநீர்பட்டுச் சிலிர்க்கும் உயிரினம். **நீரின் சிலிர்ப்பு**

6. குயில்களின் கூவலிசை. புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும். இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம். **வனத்தின் நடனம்**

**11. பழமொழியை நிறைவு செய்க.**

1. உப்பிட்டவரை **உள்ளளவும் நினை** 2. **அளவுக்கு மீறினால்** அமிர்தமும் நஞ்சு
3. உப்பில்லா **பண்டம் குப்பையிலே** 4. **விருந்தும் மருந்தும்** மூன்று நாள்
5. ஒரு பானை சோற்றுக்கு **ஒரு சோறு பதம்** 6. **நொறுங்கத் தின்றால்** நூறு வயது.

**12.** இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

**சிலை–சீலை, தொடு–தோடு, மடு–மாடு, மலை–மாலை, வளி–வாளி, விடு–வீடு.**

1. **சிலை**யைத் திறக்கும் முன் திரைச்**சீலை**யால் மறைத்திருக்கிறார்கள்.
2. பழத்தைத் **தொடும்**போது வன்மையான **தோடு(தோல்)** உடையது என்பது தெரிந்தது.

3. **மடு (சிறுகுளம்)**வில் **மாடு** தண்ணீர் குடித்தது.
4. நாங்கள் காலையில் **மலை** மீது ஏறி **மாலை**யில் இறங்கினோம்.
5. **வளி** மண்டலம் மாசடைவதனால் **வாளி**யில் நிறையும் நீரும் மாசடைகிறது.
6. நண்பா! நாம் அனைவரும் விளையாடியது போதும் என்னை **விடு**, நேரமாகிவிட்டது, நான் **வீடு** செல்லவேண்டும்.

**13.** விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துக்களை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டுபிடிக்க.

1. நீரில் செல்வது பட _ : **படகு**
2. பறவையிடம் இருப்பது இ _ கு : **இறகு**
3. மன்னனிடம் இருப்பது வா_ : **வாள்**
4. தங்கைக்கு மூத்தவள் அ – கா : **அக்கா**
5. அறிவின் மறுபெயர் ம – : **மதி**
6. சிவப்பு நிறத்தில் இருப்பது கு – தி : **குருதி**

❖ **நூலின் பெயர் -- திருக்குறள்**

14. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.

1. **இயற்கை – செயற்கை :**

**இயற்கைக்** காடுகளில் பயணிக்கச் **செயற்கைக்** கருவிகள் பயன்படுகின்றன.

2. **கொடு – கோடு :**

அகிலனின் நண்பன் எழுதுகோல் **கொடு**த்ததால் அவன் **கோடு** போட்டான்.

3. **கொள் – கோள் :**

உள்ளத்தில் உறுதி**கொள்** அப்போது உன் குறிக்**கோள்** நிறைவேறும்.

4. **சிறு – சீறு** : **சிறு**மை செய்வோரைக் கண்டால் **சீறு**வது நல்லது.

5. **தான் – தாம் :**

அந்த நாய்க்குட்டி**தான்** பள்ளத்தில் விழுந்தது, அவர்கள் **தாம்** காப்பாற்றினர்.

6. **விதி – வீதி** :

ஏழ்மையை **விதி** என்று எண்ணாமல் கல்வியால் முன்னேறிய வளவனை அவனது **வீதி**யே திரண்டு பாராட்டியது.

**15.** தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.

**(சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து)**

❖ நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் **கற்றல்**
❖ குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து **எழுத்து**
❖ கல் சிலை ஆகுமெனில், நெல் **சோறு** ஆகும்.
❖ விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை **கரு.**
❖ மீன் இருப்பது நீரில், தேன் இருப்பது **பூவில்.**

**16. எதிர்மறையாக மாற்றுக.**

❖ மீளாத் துயர் : மீளும் துயர்
❖ அருகில் அமர்க : தொலைவில் நிற்க
❖ பார்த்த படம் : பார்க்காத படம்
❖ எழுதாக் கவிதை : எழுதிய கவிதை

**17. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

1. கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

   - ❖ **அழகிய குளிர்ந்த** கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

2. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

   - ❖ **நிழல் தரும்** மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

3. வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

   - ❖ **திட்டமிடப்பட்ட** வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

4. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

   - ❖ **தொடர்ந்து கற்கும்** கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

5. குழந்தைகள் தனித்தனியே எழுதித் தர வேண்டும்.

   - ❖ **அந்தந்த வகுப்புக்** குழந்தைகள் தனித்தனியே எழுதித்தரவேண்டும்.

**18. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்து கொண்டு தொடர்களை முழுமை செய்க.**

www.tamilthugal.blogspot.com

1. நிலத்துக்கு அடியில் கிடைக்கும் **புதையல்** யாவும் அரசுக்கே சொந்தம். நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் **புதைத்தல்** நிலத்தடி நீர் வளத்தைக் குன்றச் செய்யும். ( புதையல்; புதைத்தல்)

2. காட்டு விலங்குகளைச் **சுடுதல்** தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் **சுட்டல்** திருந்த உதவுகிறது. ( சுட்டல்; சுடுதல்)

3. காற்றின் மெல்லிய **தொடுதல்** பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான **தொடுத்தல்** பூக்களை மாலை ஆக்குகிறது. (தொடுத்தல்; தொடுதல்)

4. பசுமையான **காட்சி**யைக் **காணுதல்** கண்ணுக்கு நல்லது. (காணுதல்; காட்சி)

5. பொதுவாழ்வில் **நடித்தல்** கூடாது. **நடிப்பி**ல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல்; நடிப்பு)

**19. "நேற்று நான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன்!"** என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை **அயற்கூற்றாக** எழுதுக.

- ❖ நேற்று தான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மகிழ்ந்ததாக சேகர் என்னிடம் கூறினான்.

**20. தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.**

1. இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கிவைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார். **(தொடர் சொற்றொடராக மாற்றுக)**

   - ❖ **இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்திப் புத்தக அடுக்கங்களில் அடுக்கிவைத்து, கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார்.**

2. ஓயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்துகொண்டு, கையில் ஒரு சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர். (**தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.**)

- ❖ **ஓயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டிக்கொண்டனர். காலில் சலங்கை அணிந்துகொண்டனர். கையில் ஒரு சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.**

3. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். **(கலவைச் சொற்றொடராக மாற்றுக.)**

- ❖ **கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியவுடன் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.**

4. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது. (**தனிச் சொற்றொடர்களாக மாற்றுக**)

- ❖ **ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.**

**21.** தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.

- ❖ அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் **சிவந்தது.**
- ❖ கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் **பச்சைப்** புல்வெளிகளில் கதிரவனின் **மஞ்சள்** வெயில் பரவிக் கிடக்கிறது.
- ❖ வானம் **கருக்கத்** தொடங்கியது. மழைவரும் போலிருக்கிறது.
- ❖ **வெள்ளை** மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.

22. **பொருத்தமான சொற்களால் நிரப்புக. (தங்கும், மரம் வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, தோற்பாவை, விருது, தோற்பவை, கவிழும், விருந்து)**

1. விரட்டாதீர்கள் – பறவைக்கு **மரம் வீடு**
   வெட்டாதீர்கள் – மனிதருக்கு அவைதரும் **மரவீடு**
2. காலை ஒளியினில் மலரிதழ் **அவிழும்**
   சோலைப் பூவினில் வண்டினம் **கவிழும்**
3. மலை முகட்டில் மேகம் **தங்கும்**
   பார்க்கும் மனங்கள் செல்லத் **தயங்கும்.**
4. வாழ்க்கையில் **தோற்பவை** மீண்டும் வெல்லும் – இதைத்
   தத்துவமாய்த் **தோற்பாவை** கூத்து சொல்லும்
5. தெருக்கூத்தில் நடிகருக்குக் கைதட்டலே **விருது**
   வரும்காசு குறைந்தாலும் அதுவேயவர் **விருந்து.**

23. பொருத்தமான இடங்களில் **நிறுத்தக் குறியிடுக.**

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்டசிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். – ம.பொ.சி.

❖ **பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி, சோழன் ஆண்ட சிறப்பை சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி, விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் –ம.பொ.சி.**

24. பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர்களை அமைக்க.

**1. இல்லாமல் இருக்கிறது –**

❖ அதிக மழை பெய்தும் போதிய நீர் **இல்லாமல் இருக்கிறது.**

**2. கொஞ்சம் அதிகம்**

❖ விழாக்காலங்களில் பூக்களின் விலை கொஞ்சம் **அதிகமாக இருக்கும்.**

**3. மறக்க நினைக்கிறேன்**

❖ என் நண்பனுடனான பகைமையை **மறக்க நினைக்கிறேன்.**

**4. வரப்போகிறேன்**

❖ இன்னும் சிறிது நேரத்தில் நான் நூலகத்திற்கு **வரப்போகிறேன்.**

**5. முன்னுக்குப் பின்**

❖ **முன்னுக்குப் பின்** முரணாக மாற்றிப் பேசும் பழக்கம் தவறானது.

25. தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.

| | | | |
|---|---|---|---|
| மூவேந்தர் | **மூன்று + வேந்தர் (௩)** | நாற்றிசை | **நான்கு + திசை (௪)** |
| முத்தமிழ் | **மூன்று + தமிழ் (௩)** | இருதிணை | **இரண்டு + திணை (௨)** |
| முப்பால் | **மூன்று + பால் (௩)** | ஐந்திணை | **ஐந்து + திணை (௫)** |
| நானிலம் | **நான்கு + நிலம் (௪)** | அறுசுவை | **ஆறு + சுவை (௬)** |
| பத்துப்பாட்டு | **பத்து + பாட்டு (௧0)** | எட்டுத்தொகை | **எட்டு + தொகை (௭)** |

26. பின்வரும் ஊர்ப்பெயர்களின் **மரூஉக்களை** எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| **தஞ்சாவூர்** | **– தஞ்சை** | **புதுச்சேரி** | **– புதுவை** |
| **உதகமண்டலம்** | **– உதகை** | **கும்பகோணம்** | **– குடந்தை** |
| **கோயம்புத்தூர்** | **– கோவை** | **திருநெல்வேலி** | **– நெல்லை** |
| **நாகப்பட்டினம்** | **– நாகை** | **மயிலாப்பூர்** | **– மயிலை** |
| **சைதாப்பேட்டை** | **– சைதை** | **புதுக்கோட்டை** | **– புதுகை** |
| **திருச்சிராப்பள்ளி** | **– திருச்சி** | **மன்னார்குடி** | **– மன்னை** |

27. கீழ்க்காணும் மரபுத்தொடருக்கான பொருளினைக் கண்டறிந்து தொடரில் அமைத்து எழுதுக?

❖ **மனக்கோட்டை** : **(கற்பனை)** முகிலன் படிக்காமலேயே அதிக மதிப்பெண் பெறுவதாக **மனக்கோட்டை** கட்டினான்.

❖ **கண்ணும் கருத்தும்** : **(கவனம்–சிரத்தை)** மகிழன் படிப்பதில் **கண்ணும் கருத்துமாக** இருந்தான்.

❖ **அள்ளி இறைத்தல்** : **(தேவையற்ற பயன்பாடு)** மகன் தந்தை சேர்த்த சொத்தைக் கேளிக்கைகளுக்குச் செலவிட்டு அழித்தான்.

❖ **ஆறப்போடுதல்** : **(காலம் தாழ்த்துதல்)** சினத்தை **ஆறப்போடுதல்** நன்மை தரும்.

28. சொற்களைப் பிரித்துப் பார்த்து பொருள் தருக?

- ❖ **வருந்தாமரை** : வரும் + தாமரை = வரும் தாமரை மலர்.
  வருந்தா + மரை = துன்பப்படாத மான்.
- ❖ **பிண்ணாக்கு** : பிண் + நாக்கு = பிளவான நாக்கு
  பிண்ணாக்கு = எண்ணெய்க்குப் பிறகு கிடைப்பது.
- ❖ **பலகையொலி** : பலகை + ஒலி = மரப்பலகையின் ஒலி
  பல + கை + ஒலி = பல கைகள் எழுப்பும் ஒலி
- ❖ **கானடை** : கான் + அடை = காட்டைச் சேர்
  கான் + நடை = காட்டுக்கு நடத்தல்
  கால் + நடை = காலால் நடத்தல்

**29. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க.**

1. **தாமரை இலை நீர்போல**

❖ நண்பர்கள் சிலர் **தாமரை இலை நீர் போல** பட்டும் படாமலும் பழகுவர்.

2. **மழைமுகம் காணாப் பயிர்போல**

❖ தாயை இழந்த கருணையன் **மழைமுகம் காணாப் பயிர்போல** வாடினான்.

3. **கண்ணினைக் காக்கும் இமை போல**

❖ பெற்றோர் குழந்தைகளைக் **கண்ணினைக் காக்கும் இமைபோல** காப்பர்.

4. **சிலை மேல் எழுத்து போல**

❖ சிறு வயதில் நாம் கற்றவை **சிலை மேல் எழுத்து போல** பதிந்திருக்கும்.

**30. பொருத்தமான நிறுத்தக்குறியிடுக.**

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லிவெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன

❖ **சேரர்களின் பட்டப் பெயர்களில், "கொல்லி வெற்பன்", "மலையமான்" போன்றவை குறிப்பிடத்தக்கவை. கொல்லி மலையை வென்றவன் "கொல்லி வெற்பன்" எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் "மலையமான்" எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.**

**31.** நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு – இத்தொடரை இரு தொடர்களாக்குக.

1. **நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதல் உண்டு**
2. **நான் எழுதுவதற்கு ஒரு காரணம் உண்டு.**

## குறிப்பு

✓ **மதிப்பெண் வினாக்களில் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களைப் பாடநூல் வழியாகப் படித்துப் பயிற்சி பெறவும்.**

**அ) மனப்பாடத் திருக்குறள்  ஆ) பகுபத உறுப்பிலக்கணம்**

**இ) கலைச்சொல்  ஈ) இலக்கணக்குறிப்பு  உ) தமிழ் எண்கள்**

## மூன்று மதிப்பெண் வினா – விடை

## உரைநடை

**1.** 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'. இதுபோல் **இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.**

1. **வயலில் நெல் நாற்றுகளை நட்டனர்.**
2. **புளியங்கன்றுகள் சாலை ஓரங்களில் நன்கு வளர்ந்திருந்தன.**
3. **எங்கள் வீட்டில் வாழைக்குருத்து வளர்ந்திருந்தது.**
4. **தென்னம்பிள்ளையை வீட்டருகில் நட்டு வைத்தோம்.**
5. **பனைவடலி குளக்கரையில் வளர்ந்திருந்தது.**

**2.** உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான் முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு **'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால்....** உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

- ❖ **உணவாக நான்,**
- ❖ **மழையாக நான்,**
- ❖ **ஐம்பூதங்களுள் ஒருவன் நான்,**
- ❖ **நிலத்தில் மூன்றில் இரு பங்கு நான்,**
- ❖ **இலக்கியங்களில் நான்,**
- ❖ **மனிதரால் மாசடையும் நான்...**

3. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் **ஓர் உரையாடல்** அமைக்க.

**சோலைக்காற்று** : வணக்கம் நண்பா, நலமா?

**மின்விசிறிக்காற்று** : வணக்கம் நண்பா, நலமாக உள்ளேன்.

**சோலைக்காற்று** : நீ நான்கு சுவர்களுக்குள் இருக்கிறாய். நான் அப்படியில்லை.

**மின்விசிறிக்காற்று** : நீ இயற்கையோடு மகிழ்ச்சியாகத்தானே சுற்றிவருகிறாய்.

**சோலைக்காற்று** : அதனால்தான் பல இடங்களில் மாசுபடுகிறேன்.

**மின்விசிறிக்காற்று** : உண்மைதான். மனிதர்களால் மாசுபடுகிறோம்.

**சோலைக்காற்று** : பள்ளிக் குழந்தைகளுக்குக் காற்று மாசடைவதைப்பற்றிப் புரியவைப்போம். நன்றி நண்பா!

4. புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர். திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களை அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது. இப்படியாகக் **காலமாற்றம் தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.**

- **தற்போது வீடுகளில் திண்ணை வைத்துக் கட்டுவதில்லை.**
- **தெரிந்தவரும் உறவினரும் மட்டுமே விருந்தினர் என்றாகிவிட்டது.**
- **இல்லத்தில் நடைபெறும் விழாக்கள் திருமணக் கூடங்களுக்கு மாறின.**
- **விருந்தோம்பலையும் விழா ஏற்பாட்டாளர்களே செய்து விடுகின்றனர்.**

5. **இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா** என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

- **இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகிறன.**
- **இயந்திரங்களின் வருகையால் மனிதர்களின் பணிச்சுமை பெரும்பாலும் குறைந்து வருகிறது.**
- **திறன்பேசியின் பயன்பாடு உலகத்தையே கைக்குள் கொண்டுவருகிறது.**
- **அறிவியல் கண்டுபிடிப்புகளைப் பயனுள்ள நல்வழிகளில் பயன்படுத்திப் பயனடைய வேண்டும்.**

6. மனிதர்களின் மூளையைப் போன்றது, செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள். மனிதனைப் போலவே பேச, எழுத, சிந்திக்க இத்தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுகிறது. இதனால் மனிதகுலத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக்கு **'எதிர்காலத் தொழில்நுட்பம்'** என்ற தலைப்பில் எழுதுக.

**எதிர்காலத் தொழில்நுட்பத்தின் நன்மைகள் சிலவற்றைக் காணலாம்...**

- **எதிர்காலத்தில் ஓட்டுநர் இல்லாத ஊர்திகளால் விபத்துகள் குறையும்.**
- **உடல்நலத்தையும் மனநலத்தையும் பேணுவதற்கு மிகவும் உதவும்.**
- **கொடிய நோய்களைத் தொடக்க நிலையிலேயே கண்டறிய உதவும்.**

7. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து **இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும்** எழுதுக.

தமிழ்த்துகள்





**வினா : பரதநாட்டியம் – குறிப்பு வரைக.**

**விடை :** பரதநாட்டியக் கலை மிகத் தொன்மையானது. இது தமிழ்நாட்டுக்குரிய நடனம். இந்நாட்டியத்தை ஆடுபவர் பரத நாட்டியத்திற்கான நகைகளையும், காலில் அழகிய சலங்கையும் அணிந்திருப்பார். சிறப்பான வண்ணப் பட்டாடைகளையும் அணிந்து இருப்பர்.

1. **வினா – கரகாட்டம் பற்றி கூறுக.**

**விடை :** **'கரகம்'** என்னும் பித்தளைச் செம்பையோ, சிறிய குடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடுவது கரகாட்டம், இது **கும்பாட்டம்** என்றும் அழைக்கப்படுகிறது.

8. **"தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்"** இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

**இடம் :** மா.பொ.சியின் **"எனது போராட்டம்"** என்னும் தன்வரலாற்று நூலில் இடம் பெற்றுள்ளது.

**பொருள் : "என் உயிரைக் கொடுத்தாவது தலைநகரைக் காப்போம்"** என்று சிறப்புக் கூட்டத்தில் பேசினார்.

**விளக்கம்** : ஆந்திர தலைநகராகச் சென்னையைக் கொண்டுவர முயற்சித்தபோது, சென்னை பற்றிய தீர்மானம் ஒன்றை முன்மொழிந்து **"தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்"** என்று ம.பொ.சி. முழுங்கினார்.

9. **சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே** என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக?

- ❖ **அரசியல் அறம் :** நீரைச் சேமித்து விளைச்சலைப் பெருக்குதல் வேண்டும்.
- ❖ **போர் அறம்** : போரைத் தவிர்த்தல் வேண்டும்.
- ❖ **வணிக அறம்** : மக்களின் நலம் , வளம் சார்ந்து நடைபெற வேண்டும்.
- ❖ **உதவி** : வறுமையில் இருப்பவர்க்குத் தன்னால் இயன்றதைக் கொடுத்து வாழ வேண்டும்.

10. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் **'தர்க்கத்திற்கு அப்பால்'** கதை மாந்தர் வாயிலாக விளக்குக.

- ❖ **கதை மாந்தர் :** ஈகை செய்தவன், பார்வையற்ற மாற்றுத்திறனாளி.
- ❖ **இரயில் நிலையத்துக்குள் நுழையும் பயணி ஒருவர், பார்வையற்ற பிச்சைக்காரனின் தட்டில் இரண்டணாவைப் போடுகிறார்.**
- ❖ **இரயில் கட்டணம் உயர்ந்ததால் தட்டிலிருந்து ஓரணாவை எடுக்கப்போகிறார்.**
- ❖ **உடனே, பிச்சைக்காரன் தட்டிலிருந்து எடுக்கிறியே? என்ற குரல் ஒலிக்கிறது. மீண்டும் காசைத் தட்டிலேயே போடுகிறார்.**
- ❖ **இவ்வாறு ஜெயகாந்தன் தன் கதைகளில் கதை மாந்தர்களின் எண்ண ஓட்டத்தை மிகச் சிறப்பாகப் பதிவு செய்திருக்கிறார்.**

11. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிபடக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச்சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம். செயற்கை நுண்ணறிவு, படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.

அ. திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் எவை?

**கடவுச்சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழைய முறைகள் ஆகும்**.

ஆ. திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது?

**காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.**

இ. உயர்வகைத் திறன்பேசிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது?

**செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம்.**

12. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன; சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணைசெய்கின்றன.

அ. பழந்தமிழ் மக்களின் எந்தெந்த எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணைசெய்கின்றன?

**கலை, அழகியல், புதுமைகள்.**

ஆ. நிகழ்கலைகளின் பயன்கள் இரண்டினை எழுதுக.

**மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன; சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன.**

இ. நிகழ்கலைகள் எப்பகுதி மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றன?

**சிற்றூர் மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றன.**

**13. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

அ. ஆவூர் மூலங்கிழாரின் போர் அறம் யாது?

**தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது.**

ஆ. போர் அறம் என்பது எதனைக் குறிக்கிறது?

**போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.**

இ. யாருக்கெல்லாம் தீங்கு வராதவண்ணம் போர் புரிய வேண்டும்?

**பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும்**

## செய்யுள்

1. மொழியின் சிறப்புகளைப் பாடும் கவிதைகளுள் உங்களுக்குப் பிடித்தவற்றை எழுதுக.

- **"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்**
  **இனிதாவது எங்கும் காணோம்" – பாரதியார்**
- **"அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!**
  **தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!"**

2. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

- **தமிழன்னையானவள் தாய்மை மொழியானவள்,**
- **அழகான செழுமையான தமிழானவள்,**
- **பழமைக்கும் பழமையாய்த் தோன்றிய மூத்தவள்,**
- **குமரிக் கண்டத்தில் பேரரசானவள், பாண்டிய மன்னனுக்கு மகளானவள்,**
- **திருக்குறள் தந்த பெருமைக்குரியவள், பதினெண் மேற்கணக்கு–கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களையும் தந்தவள்.**
- **அதனால் பொங்கி எழும் நினைவுகளால் பாவலரேறு தமிழன்னையை வாழ்த்துகிறார்.**

3. தமிழழகனார் **தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும்** பாங்கினை விளக்குக.

1. **இயல், இசை, நாடகம்** என முத்தமிழாய் வளர்ந்தது தமிழ். கடல் முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது.
2. **முதல், இடை, கடை** ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. **வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம்** ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது.
3. ஐம்பெருங்காப்பியங்களை அணிகலனாய்ப் பெற்றது. மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும் வழியைத் தருகிறது.
4. சங்கப் புலவர்களால் காக்கப்பட்டது. அலைகளால் சங்கினைக் காக்கிறது.

**4. மழைநின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.**

**குறிப்பு:** இலைகளில் சொட்டும் நீர் – உடலில் ஓடும் மெல்லிய குளிர் – தேங்கிய குட்டையில் "சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் – ஓடும் நீரில் காகிதக் கப்பல்.

- **இலைகளில் சொட்டும் நீர் சிறு மழையாகி மரத்தடியில் நிற்பவரை செல்லமாய் நனைக்கிறது.**
- **உடலில் ஓடும் மெல்லிய குளிரால் அனைவரது உடலும் நடுங்குகிறது.**
- **தேங்கிய குட்டையில் "சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் மகிழ்ந்து ஆரவாரம் செய்கின்றனர்.**
- **பெருமழைக்குப் பின் ஓடும் நீரில் காகிதக் கப்பல்களைக் குழந்தைகள் ஆசையாய் மிதக்க விடுகின்றனர்.**

5. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?

- **முல்லை நில உணவுப்பொருள்கள் :** தினை , சாமை, வரகு, பால்.
- **மருத நில உணவுப்பொருள்கள் :** நெல் அரிசி, காய்கறிகள், பால், பழங்கள்.

6. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் **கூத்தராற்றுப்படை** எவ்வாறு காட்டுகிறது?

- **பகலில் இளைப்பாறி, இரவில் தங்கிச் செல்லுங்கள்.**
- **பூங்கொத்துகளை அணிந்துகொண்டு சிற்றூரை அடையுங்கள்.**
- **நன்னனின் கூத்தன் என்று சொல்லி உரிமையுடன் நுழையுங்கள்.**
- **நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும், தினைச் சோற்றையும் பெறுவீர்.**

7. **"மாளாத காதல் நோயாளன் போல்"** என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

**உவமை :** மருத்துவர், உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார்.

**செய்தி :** இறைவன், துன்பத்தைத் தந்தாலும் அடியவனாகிய நான், இறைவனின் அருளையே எப்போதும் எதிர்பார்த்து வாழ்வேன்.

**8.** உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தி, வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

- **கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதை நீ அறிய வேண்டும்.**
- **நீ நன்றாகப் படித்தால் படிப்புக்கேற்ற வேலை கிடைக்கும்.**
- **நீ நன்றாகப் படித்து வேலைக்குச் சென்றால் உனக்கு நல்ல வருமானம் கிடைக்கும்.**
- **படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் சென்றால் குறைந்த வருமானத்தால் வறுமைதான் கிட்டும்.**

- **கல்வியால் என்றும் பெருமை கிடைக்கும், கற்ற கல்வி என்றும் கைவிடாது,**
- **ஆகவே நீ தொடர்ந்து படிக்க வேண்டும்; மீண்டும் பள்ளிக்கு வரவேண்டும் என்றெல்லாம் எடுத்துரைப்பேன்.**

**9. மன்னன், இடைக்காடனார் என்ற புலவனுக்கு சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.**

- குலேசபாண்டியன் இடைக்காடனாரின் பாடலைச் சுவைத்துத் தலையசைத்து விரும்பிக் கேட்காமல் புலவரை அவமதித்து விட்டார்.
- அதனால் மனம் வருந்திய இடைக்காடனார் இறைவனிடம் முறையிட்டார். மன்னனின் தவறை அவனுக்கு உணர்த்துவதற்காக இறைவன் கடம்பவனக் கோயிலை விட்டு நீங்கிச் சென்றார்.
- இதை அறிந்த குலேசபாண்டியன் தனது பிழையைப் பொறுத்தருளுமாறு இறைவனிடம் வேண்டிக் கேட்டான்.
- இறைவனும் மன்னனை மன்னித்துப் பொறுத்தருளினார். பிறகு மன்னன் மகிழ்ச்சியோடு இடைக்காடனார்க்குப் பல்வேறு சிறப்புகளைச் செய்தான்.

10. **வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக** அணிந்திருக்கும் அணிகலன்களுடன் **செங்கீரை** ஆடிய நயத்தை விளக்குக.

- **வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக,** அவனது திருவடியில் அணிந்த சிறுசெம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடின.
- இடையில் அரைஞாண் மணியோடு ஒளி வீசுகின்ற அரைவட்டங்களும் சேர்ந்து ஆடின.
- பசும்பொன்னைப் போன்று ஒளிரும் தொந்தியுடன் சிறுவயிறும் சரிந்து ஆடியது.
- பட்டம் கட்டிய நெற்றியில் பொட்டுடன் வட்ட வடிவான சுட்டி பதிந்து ஆடியது.
- கம்பிகளால் உருவான குண்டலங்களும் காதில் குழைகளும் அசைந்து ஆடின.
- உச்சிக் கொண்டையும் அதிலுள்ள ஒளிமிக்க முத்துகளும் ஆடின.
- இவற்றுடன் பவளம் போன்ற திருமேனியும் ஆட, முருகன், குழந்தையாகச் செங்கீரை ஆடினான் என்று குமரகுருபரர் வருணித்துப் பாடியுள்ளார்.

11. **'முதல் மழை விழுந்ததும்'** என்னவெல்லாம் நிகழ்வதாக **கு.ப.ரா.** கவிபாடுகிறார்?

- முதல் மழை விழுந்ததும் நிலத்தின் மேல்மண் ஈரமாகிப் பதமாகிவிட்டது.
- உழவர் காளைகளை ஓட்டிச்சென்று பொன் ஏர் தொழுது, ஏரில் அவற்றைப் பூட்டுகிறார்கள்.

- ❖ மாட்டைத் தூண்டி, கொழுவை அமுக்க, மண் நன்றாகப் புரள்கிறது.
- ❖ இவ்வாறு காட்டை உழுத நிலையில் மீண்டும் மழைபொழிய, நிலம் சிலிர்க்க, நாற்று நிமிர்கிறது.

12. **வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை** – இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

❖ வீட்டிற்கு முன்புறத்தில் இருந்த சிறிய இடத்தை **வாளித் தண்ணீரால்** ஈரப்படுத்திப் பூக்களின் விதைகளை விதைத்தேன். **சாயக் குவளையிலுள்ள** சாயத்தைக் கொண்டு ஈரப்படுத்திய இடத்தின் ஓரங்களிலுள்ள செங்கற்களை வண்ணமாக்கினேன். வீட்டின் சுவர் ஓரத்தில் பட்டுவிட்ட தேவையற்ற வண்ணத்தைக் **கந்தைத் துணியால்** துடைத்தேன். பிறகு **கட்டைத் தூரிகையால்** சுவரில் அழகிய வண்ணப் பூச்சு அடித்தேன்.

13. **சித்தாளின் மனச்சுமைகள்**

**செங்கற்கள் அறியாது – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்** : **கவிஞர் நாகூர் ரூமி** எழுதிய **சித்தாளு** என்னும் கவிதையில் உள்ளது.

**பொருள்** : கட்டடங்கள் கட்டுவதற்கு உதவி செய்யும் சித்தாளின் மனச்சுமைகளை, செங்கற்கள் அறியாது என்னும் பொருளைக் கூறுகிறது.

**விளக்கம்** : சித்தாளின் மனச்சுமைகளை அவள் சுமக்கும் செங்கற்கள் அறியாது. அதுபோலவே மற்ற மனிதர்களும் அவளின் மனச்சுமைகளை அறிந்துகொள்ள மாட்டார்கள் என்று கவிஞர் இக்கவிதையில் வெளிப்படுத்துகிறார்.

14. எவையெல்லாம் அறியேன் என்று **கருணையன்** கூறுகிறார்?

- ❖ **"உயிர் வாழும் வழி அறியேன்,**
- ❖ **உடல் உறுப்புகள் இயங்குதல் இல்லா உடலின் தன்மையை அறியேன்,**
- ❖ **அந்த உடலுக்குத் தேவையான உணவைத் தேடும் வழியையும் அறியேன்,**
- ❖ **காட்டில் பிற இடங்களுக்குச் செல்வதற்கான வழியையும் அறியேன்"** என்று கருணையன் வருந்திக் கூறுகிறார்.

## இலக்கணம்

1. '<u>அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது</u>' இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை உமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். இக்கூற்றில் **அடிக்கோடிட்டுள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.**

அறிந்தது : **அறிதல்** தெரிந்தது : **தெரிதல்** புரிந்தது : **புரிதல்**

பிறந்தது : **பிறத்தல்** அறியாதது : **அறியாமை** புரியாதது : **புரியாமை**

தெரியாதது : **தெரியாமை** பிறவாதது : **பிறவாமை**

**2. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.** இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

- **மல்லிகைப்பூ : இருபெயரொட்டுப் பண்புத்தொகை**
- **பூங்கொடி : உவமைத்தொகை**
- **ஆடு மாடு : உம்மைத்தொகை**
- **குடிநீர் : வினைத்தொகை**
- **சுவர்க்கடிகாரம் : உருபும் பயனும் உடன்தொக்க தொகை**
- **மணி பார்த்தாள் : இரண்டாம் வேற்றுமைத்தொகை**

3. தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

- **கண்ணே கண்ணுறங்கு : விளித்தொடர்**
- **காலையில் நீயெழும்பு : வேற்றுமைத்தொடர்**
- **மாமழை பெய்கையிலே : உரிச்சொல் தொடர்**
- **மாம்பூவே கண்ணுறங்கு : விளித்தொடர்**
- **பாடினேன் தாலாட்டு : வினைமுற்றுத்தொடர்**
- **ஆடி ஆடி ஓய்ந்துறங்கு : அடுக்குத்தொடர்**

**4. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும் –** இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

- **பொருள்கோள்** : ஆற்று நீர் பொருள்கோள் தமிழ்த்துகள்
- **விளக்கம் :** பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை ஆற்று நீரின் போக்கைப் போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைவது ஆற்று நீர் பொருள்கோள் ஆகும்.
- **பொருத்தம்** : முயற்சி ஒருவனுக்கு செல்வத்தைத் தரும். முயற்சி இன்மை வறுமையைப் புகுத்தி விடும். இவ்வாறு ஆற்று நீரைப் போல நேராகப் பொருள் கொள்ளும்படியாக அமைந்துள்ளது.

5. அவந்திநாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின்வழி எழுதுக.

- **அவந்தி நாட்டு மன்னன் மருதநாட்டு மன்னனுடன் போர்புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்.**

❖ **எனவே, மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது வஞ்சித்திணை என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது.**

❖ **போருக்குச் செல்பவர் வஞ்சிப்பூவைச் சூடிச் செல்வர்.**

6. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு **தற்குறிப்பேற்ற அணி** அமைவதை எடுத்துக்காட்டுக.

❖ **அணி இலக்கணம்** : இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக்கூறுவது **தற்குறிப்பேற்ற அணி** எனப்படும்.

❖ **எ.கா : "போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி**
**'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட"**

❖ **விளக்கம் :** கோவலனும், கண்ணகியும் மதுரைக்குச் சென்றனர். அப்போது மதில்மேல் இருந்த கொடிகள் காற்றில் அசைந்தன. கோவலன் மதுரைக்குள் வந்தால் கொலை செய்யப்படுவான் என்பதை அறிந்த கொடிகள் இங்கு வராதே என கையசைப்பதைப் போன்று உள்ளதாக கவிஞர் தன் கருத்தை ஏற்றிக் கூறியுள்ளதால் இப்பாடலில் **தற்குறிப்பேற்ற அணி** பயின்று வந்துள்ளது.

**7. தன்மையணியை விளக்குக.**

❖ **தன்மையணி :** பாடலில் எந்த வகையான பொருள் இடம்பெற்றிருந்தாலும் இயற்கையில் அந்தப் பொருளின் இயல்புத் தன்மையினை அழகுற உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மையணி எனப்படும்.

❖ **பொருள், குணம், சாதி, தொழில்** எனத் தன்மையணி நான்கு வகைப்படும்.

**எ.கா – மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்**
**கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் – வையைக்கோன்**
**கண்டளவே தோற்றான், அக்காரிகைதன் சொற்செவியில்**
**உண்டளவே தோற்றான் உயிர். – சிலப்பதிகாரம்**

❖ **பாடல் பொருள் :** கண்ணீருடன் கண்ணகியின் தோற்றத்தைக் கண்ட பாண்டிய மன்னன் அப்போதே தோற்று, அவள் சொல், தன் செவியில் கேட்டவுடன் உயிரை விட்டான்.

❖ **அணிப்பொருத்தம் :** கண்ணகியின் துயரமிகுந்த தோற்றத்தினையும் அதன் பிறகு நடந்த நிகழ்வுகளின் தன்மைகளை இயல்பான சொற்களில் விளக்குவதால் இப்பாடலில் பயின்று வந்த அணி **தன்மையணி** ஆகும்

8. **தீவக அணியை விளக்குக.**

**தீவக அணி** : ஓர் அறையில், ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தருவது போல, செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல

இடங்களிலும் உள்ள சொற்களோடு பொருந்திப் பொருளை விளக்கும் அணி **தீவக அணி** எனப்படும். **முதல், இடை, கடை நிலைத் தீவகம்** என்று **மூன்று** வகைப்படும்.

**எ.கா – "சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்**
**ஏந்து தடந்தோள், இழிகுருதி – பாய்ந்து**
**திசைஅனைத்தும், வீரச் சிலைபொழிந்த அம்பும்**
**மிசைஅனைத்தும் புள்குலமும் வீழ்ந்து"**

❖ **பாடல் பொருள் :** அரசனுடைய கண்கள் சினத்தால் **சிவந்தன,** அதனால் பகை மன்னர்களுடைய தோள்களும் **சிவந்தன,** குருதியால் திசைகளும் அம்புகளும் பறவைக் கூட்டங்களும் **சிவந்தன.**

❖ **அணிப்பொருத்தம் : 'சேந்தன'** என்ற சொல் **'சிவந்தன'** பாடலில் கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் ஆகிய அனைத்தோடும் பொருந்திப் பொருள் தருவதால் இப்பாடலில் **தீவக அணி** இடம்பெற்றுள்ளது.

**9. திருக்குறளை அலகிட்டு வாய்பாடு தருக.**

**அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்**
**தஞ்சம் எளியன் பகைக்கு.**

| வ எண் | சொல் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | அஞ்/சும் | நேர் நேர் | தேமா |
| 2 | அறி/யான் | நிரை நேர் | புளிமா |
| 3 | அமை/விலன்/ | நிரை நிரை | கருவிளம் |
| 4 | ஈ/கலான் | நேர் நிரை | கூவிளம் |
| 5 | தஞ்/சம் | நேர் நேர் | தேமா |
| 6 | எளி/யன் | நிரை நேர் | புளிமா |
| 7 | பகைக்கு | நிரைபு | பிறப்பு |

## குறிப்பு

❖ **கற்றல் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள உரைப்பத்தி, விடைக்கேற்ற வினாக்கள் போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் கொண்டு பாடப்பகுதியின் உரைநடையில் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.**

❖ **பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள மனப்பாடப் பகுதிகளை நன்கு படித்து அடிபிறழாமல் மீண்டும் மீண்டும் எழுதிப் பார்க்க வேண்டும்.**

❖ **மனப்பாடத் திருக்குறள்களைத் தவிர்த்து ஏனைய திருக்குறள்களை அலகிட்டுப் பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.**

## ஐந்து மதிப்பெண் வினா – விடைகள்

## செய்யுள் நெடுவினா

1. மனோன்மணீயம் சுந்தரனாரின் **தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும்** பெருஞ்சித்திரனாரின் **தமிழ் வாழ்த்தையும்** ஒப்பிட்டு **மேடைப்பேச்சு** ஒன்றை உருவாக்குக.

- ❖ மேடையில் வீற்றிருக்கும் சான்றோர் பெருமக்கள் **அனைவருக்கும் வணக்கம்.**
- ❖ தமிழ்மொழியின் சிறப்புகளை வாழ்த்தி **மனோன்மணீயம் சுந்தரனாரும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரும்** பாடியுள்ளவற்றை ஒப்பிட்டுப் பேசுவதற்காக வந்துள்ளேன்.

**தமிழ்த்தாய் வாழ்த்து**

❖ நீர் நிறைந்த கடலை ஆடையாக உடுத்திய பூமிப்பெண்ணிற்கு இந்தியத் திருநாடு முகமாகத் திகழ்கிறது. அதன் நெற்றியில் திலகமெனத் திராவிடத் திருநாடு விளங்குகிறது. அந்தத் திலகத்தின் வாசனைபோல உலகமெல்லாம் இன்பம் காண, புகழ் பரப்பும் பெருமை மிக்கவள் தமிழாகிய தெய்வப்பெண்.

❖ அவ்வாறான தமிழ்ப்பெண் என்றும் இளமையாகவும் திறமையாகவும் இருப்பதை வியந்து, செயல்களை எல்லாம் மறந்து வாழ்த்துவோம் என்று வாழ்த்திப் பாடுகிறார் **மனோன்மணீயம் சுந்தரனார்.**

**தமிழ் வாழ்த்து**

❖ அன்னை மொழியே! பழமைக்கும் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே! குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட பேரரசே! பாண்டிய மன்னனின் மகளே!

❖ திருக்குறளின் பெருமையே! பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே! சிலப்பதிகாரமே! மணிமேகலையே!

❖ செழுமை மிக்க தமிழே! எமக்குயிரே! சொல்லுதற்கரிய நின் பெருமையை என்னுடைய தமிழ் நாக்கு எவ்வாறு எடுத்துரைக்கும்?

❖ நின் நிலைத்தத் தன்மையை வேற்று மொழியாரும் புகழ்ந்துரைப்பதால் எமக்கும் பற்றுணர்வு ஏற்படுகிறது.

❖ தேனைக் குடித்த வண்டினைப் போன்று உன்னைச் சுவைத்த நாங்கள் உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம் என்று **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** தமிழை வாழ்த்துகிறார்.

- ❖ இவ்வாறாக இருபெரும் கவிஞர்களும் தமிழ்மொழியின் பழமை, வளமை, செழுமை மற்றும் பெருமைகளை வாழ்த்திப் பாடுகின்றனர். **நன்றி! வணக்கம்!**

2. **ஆற்றுப்படுத்துதல்** என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

- ❖ **ஆற்றுப்படுத்துதல்** என்பதற்கு **நல்வழிகாட்டுதல்** என்று பொருள்.
- ❖ அன்றைய ஆற்றுப்படுத்துதல் என்பது புலவர்களையும் கலைஞர்களையும் நெறிப்படுத்தி, வள்ளல்களிடம் செல்வதற்கு வழிகாட்டுதலாக இருந்தது.
- ❖ அத்தகைய வழிகாட்டுதல் இன்றைய சூழலில் **திறமை இருந்தும்**

**வெற்றிடைய வழிவகை தெரியாதவர்களுக்கு வழிகாட்டுவதாகவும், வறுமையில் வாடுபவர்களுக்கு அதனைப் போக்கும் வழியைக் காட்டுவதாகவும், துன்பத்தில் இருப்பவரின் துன்பம் களைவதாகவும் மாறி இருக்கிறது.** எடுத்துக்காட்டாக,

- ❖ **கல்வியில் வழிகாட்டுதல்:** வறுமையால் கற்க முடியாத மாணவர்களுக்குத் தொண்டு நிறுவனங்கள், செல்வந்தர்கள் உதவுவது.
- ❖ **தொழிலில் வழிகாட்டுதல்:** இளைஞர்களுக்குத் தொழில் செய்ய பயிற்சியளிப்பது, பணம் கொடுத்து உதவுவது.
- ❖ **மருத்துவத்தில் வழிகாட்டுதல்:** நோயுற்றோருக்கு நல்ல மருத்துவரையோ, மருத்துவமனையையோ அரசின் மருத்துவக் காப்பீடுகளைப் பற்றிப் பரிந்துரைப்பது.
- ❖ புலவர்கள், கலைஞர்கள் போன்றோர் இன்றும் வள்ளல்களால் ஆற்றுப்படுத்தப்படுவதும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது.
- ❖ இவ்வாறு, அன்றும் இன்றும் **"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"** என்ற தமிழரின் பண்பால் வழிகாட்டுதல்கள் என்ற அறச்செயல்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன.

**3. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.**

- ❖ எங்கள் வீட்டிற்குத் தாத்தா, பாட்டி, அத்தை மற்றும் அத்தையின் குழந்தையும் வருவதாக எங்கள் அப்பா கூறினார்.
- ❖ உடனே எங்கள் அம்மா வீட்டைத் தூய்மை செய்யத் தொடங்கினார்.
- ❖ நானும் அம்மாவுக்கு உதவி செய்தேன்.
- ❖ குழந்தையுடன் முதல் முறையாக அத்தை வருவதால், நானும் தம்பியும் மிகுந்த ஆர்வமாக இருந்தோம்.
- ❖ அவர்களை அழைத்து வருவதற்கு அப்பா பேருந்து நிலையம் சென்றார்.
- ❖ குழந்தையோடு அத்தை வருவதால் அம்மா, ஆப்பம், இனிப்பு மற்றும் பொங்கல் போன்றவற்றைச் செய்தார்.

- தாத்தாவும் பாட்டியும் எங்களைப் பார்த்தவுடன் **'என் அன்புப் பேரப்பிள்ளைகளே'** என்று கட்டிக்கொண்டனர்.
- நானும் தம்பியும் பாப்பாவைத் தூக்குவதற்குப் போட்டியிட்டோம்.
- அம்மா, அத்தையுடன் கதை பேசிக்கொண்டே பாப்பாவிற்கு ஆப்பம் ஊட்டினார், அத்தையோ எங்களுக்கு ஊட்டி மகிழ்ந்தார்.
- அனைவரும் கடைத்தெரு, கோயில், கடற்கரை போன்ற இடங்களுக்குச் சென்று வந்தோம்.
- எங்கள் வீட்டில் சமைத்து வைத்திருந்த பிற்பகல் உணவை அனைவரும் மகிழ்ச்சியோடு உண்டோம்.
- அத்தையை ஊருக்கு அனுப்ப மனமே இல்லை; விடுமுறைக்கு ஊருக்கு அழைத்துச் செல்வதாகக்கூறி அம்மா எங்களை ஆறுதல் படுத்தினார்.
- உறவினர்களின் வருகையால் குடும்பமே மகிழ்ந்தது. தினமும் வீட்டிற்கு உறவினர்கள் வந்தால் நன்றாக இருக்கும் என்று பேசிக்கொண்டே தூங்கிவிட்டோம்.

**4. இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவி சாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.**

- குலேச பாண்டியன் பொருள் செல்வமும் கல்விச் செல்வமும் உடையவன். அவன் முன் புலவர் இடைக்காடனார் சொற்சுவை நிரம்பிய கவிதையைப் பாடினார். மன்னன் புலவரின் கவிதையைச் சிறிதும் மதிக்காமல் புலவரை அவமதித்தான்.
- இடைக்காடனார் இறைவனிடம் சென்று மன்னனின் செயலை முறையிட்டார். இடைக்காடனார் இறைவனிடம், **"மன்னன் என்னை இகழவில்லை; சொல்லின் வடிவாக உள்ள பார்வதி தேவியையும் சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையும் அவமதித்தான்"** என்று சினத்துடன் கூறினார்.
- இறைவன், புலவர் இடைக்காடனார்க்கும் அவர் நண்பர் கபிலருக்கும் மன மகிழ்ச்சி உண்டாக்க நினைத்தார். அதனால் தனது வடிவத்தை மறைத்துக் கோவிலை விட்டு வெளியேறினார். நடந்ததை அறிந்த மன்னன் தனது குற்றத்தை அறிய இறைவனிடம் வேண்டி நின்றான்.
- இறைவன் மன்னனிடம் **"கடம்பவனம் விட்டு ஒருபோதும் நீங்க மாட்டோம்; இடைக்காடனார் பாடலை இகழ்ந்தது மட்டுமே உன் குற்றம்; இடைக்காடனார் மீது கொண்ட அன்பினால் இங்கு வந்தோம்"** என்றார்.
- பாண்டிய மன்னன், இறைவனிடம் தம் குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டினான். இறைவனும் மன்னனைப் பொறுத்தருளினார். பின்பு மன்னன் இடைக்காடனாருக்குப் பல்வகைச் சிறப்புகளைச் செய்தான்.

5. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

| மருவூர்ப்பாக்க வணிக வீதிகள் | இக்கால வணிக வளாகங்கள், அங்காடிகள் (கடைத்தெருக்கள்) |
|---|---|
| மணப்பொருள்கள், பட்டு, முடி, பருத்திநூல் கொண்டு பின்னும் துணிகள், பொன், முத்து, பவளம், மணி முதலானவை, எட்டுவகை தானியங்கள் விற்கும் வீதிகள் தனித்தனியே அமைந்திருந்தன. | ஒரே கட்டடத்தில் அனைத்துப் பொருள்களும் விற்பனை செய்கின்ற பல்வேறு அங்காடிகள் உள்ளன. பல்வேறு பொருள்கள் விற்கும் கடைத்தெருக்கள் இன்றும் காணப்படுகின்றன. |
| பிட்டு, அப்பம் விற்போர், மீன் விற்கும் பரதவர், உப்பு விற்கும் உமணர், வெற்றிலை விற்பவர், இறைச்சி விற்பவர், எண்ணெய் விற்பவர் போன்றோர் தெருக்களில் விற்பனை செய்தனர். | அனைத்தும் ஒரே வளாகத்தில் கிடைக்கும் வகையிலும், பொருள்களின் பாதுகாப்பிற்கு வசதியாகவும் பொருள்கள் வாங்குவோரின் வசதிகளுக்காகவும் குளிர்சாதன வசதிகளோடு வணிக வளாகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. |
| தெருக்களில் வெண்கலம் மற்றும் செம்புப் பாத்திரங்கள் செய்வோர், மரத்தச்சர், இரும்புக்கொல்லர், ஓவியர், மண் பொம்மைகள் செய்பவர், சிற்பிகள் ஆகியோர் இருந்த வணிக வீதிகள் இருந்தன. | சிறுதொழில் நிறுவனங்கள், பெரும் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் போன்றவை ஒரே இடத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. www.tamilthugal.blogspot.com |
| பொற்கொல்லர், இரத்தின வேலைசெய்பவர், தையற்காரர், தோல்பொருள் தைப்பவர், துணியாலும் கட்டைகளாலும் பொம்மைகள் செய்பவர் போன்றோர் இருந்தனர். | எல்லாவிதமான பொருள்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் ஊர்தோறும் சந்தைகள் வணிக வளாகங்கள் போன்று அமையப்பெற்றுள்ளன. |

**6. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும், உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.**

❖ **வீரமாமுனிவர், தேம்பாவணி** என்ற காப்பியத்தில் தேன் போன்ற சுவையுடைய பாடல்களை எழுதியுள்ளார்.

❖ கானகத்தில் வாழ்ந்து வந்த **கருணையன்** என்பவன் தனது தாயார் எலிசபெத்தின் மறைவுக்கு அடைந்த துயரத்தையும், இயற்கையும் கருணையன் மீது பரிவுகாட்டி வருந்தியதையும் வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற பாடல்களில் உவமைகளாலும், உருவக மலர்களாலும் கவிதாஞ்சலியாகப் படைக்கிறார்.

**உவமை, உருவகங்களில் கவிதாஞ்சலி...**

❖ செம்மையான அறங்களைத் தன்னுள் புதைத்திருந்த கருணையனின் தாய் மறைந்து விட்டாள். கருணையன் பூமித்தாயை வணங்கி குழியிலே மலர்ப்படுக்கையைப் பரப்பினான். அன்னையின் உடலை மண்ணை இட்டு மூடி வணங்கி, பின் மலர்களையும் தன் கண்ணீரையும் ஒன்றாகப் பொழிந்தான்.

❖ கருணையன் தாயின் மார்பில் மணிமாலையென வாழ்ந்தான். இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து காய்ந்து மணியாகு முன்பே, தூயமணி போன்ற மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்து விட்டது போல கருணையன் வாடினான்.

❖ தாயின் மறைவால் கருணையன் மனம் மரக்கிளையில் இருந்து பறிக்கப்பட்ட மலர் போல் வாடுகிறது. தீயையும், நஞ்சையும் கொண்ட அம்பு துளைத்ததால் ஏற்படும் புண்ணின் வலியைப் போல வேதனையைத் தருகிறது.

❖ மேலும் கருணையன் துணையைப் பிரிந்த ஒரு பறவையைப் போல அழுது வாடுகிறான். சரிந்த வழுக்கு நிலப்பகுதியில் தனியே விடப்பட்டு, செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல் ஆகிறான்.

❖ நவமணிகள் பதித்த மணிமாலைகளைப் போன்று நல்ல அறன்கள் எல்லாம் அணிந்த மார்பனாகிய கருணையன் இவ்வாறெல்லாம் அழுது புலம்பினான். இப்புலம்பலைக் கேட்டு, பல்வேறு இசைகளை இயக்கியது போன்று மணம் வீசும் மலர்களும், சுனைதோறும் உள்ள பறவைகளும், வண்டுகளும் அழுவன போலக் கூச்சலிட்டன என்று **வீரமாமுனிவர் கவிதாஞ்சலி செய்கிறார்.**

## கடிதம்

**1. வாழ்த்து மடல் (நண்பனுக்குக் கடிதம்)**

மாநில அளவில் நடைபெற்ற **"மரம் இயற்கையின் வரம்"** எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

**தேனி,**

**10.10.2022.**

**அன்புள்ள நண்பன் மணிக்கு தமிழ் எழுதுவது.**

இங்கு நாங்கள் நலம், உன் நலமறிய ஆவல்.

நீ மாநில அளவில் நடைபெற்ற **'மரம் இயற்கையின் வரம்'** என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று, முதல் பரிசு பெற்றதை அறிந்து மிகவும் மகிழ்ந்தேன்.

உனது கட்டுரையையும் படித்தேன். அக்கட்டுரை எங்களுக்கு விழிப்புணர்வைத் தந்தது.

**நீ இன்னும் பல போட்டிகளில் கலந்துகொண்டு நிறைய பரிசுகள் வாங்க வாழ்த்துகிறேன்.**

**இப்படிக்கு,**

அன்பு நண்பன்,

**அ. தமிழ்**

**உறைமேல் முகவரி**

பெறுநர்:

**க. மணி,**

த/பெயர் – கண்ணன்

50, பாரதி வீதி, கம்பர் நகர்,

சேலம். 642006.

**2. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி, ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக. (அலுவலகக் கடிதம்)**

**அனுப்புநர்**

அ. குமரன்,

15, கண்ணதாசன் தெரு,

இளங்கோ நகர்,

நெல்லை – 2

**பெறுநர்**

மின்வாரிய அலுவலர்,

மின்வாரிய அலுவலகம்,

நெல்லை – 2

**ஐயா,**

**பொருள்: பழுதடைந்த மின்விளக்குகளை மாற்றித் தருதல் தொடர்பாக...**

**வணக்கம்.** எங்கள் பகுதியில் **300 குடும்பங்கள்** உள்ளன. இங்கு சாலைகளில் உள்ள மின்விளக்குகள் அனைத்தும் மிகவும் **பழுதுடைந்துள்ளன.** அதனால் இப்பகுதிகள் இரவு நேரங்களில் மிகவும் **இருளாக உள்ளன**. குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் மேடு பள்ளம் தெரியாமல் விழுந்து விடுகின்றனர். **இருளைப் பயன்படுத்தித் திருட்டு போன்ற குற்றச் செயல்களும் நடைபெறுகின்றன.** எனவே பழுதடைந்துள்ள மின்விளக்குகளை மாற்றித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நன்றி!**

**இடம்**: நெல்லை — **தங்கள் உண்மையுள்ள,**


**நாள்:** 16.09.2022 — க. குமரன்

**உறைமேல் முகவரி**

மின்வாரிய அலுவலர்,
மின்வாரிய அலுவலகம்,
நெல்லை – 2

**படம்**

**3. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



தமிழ்த்துகள்

**தேவையற்றதைச் சிந்திக்காமல்!**
**வேண்டாததைப் பார்க்காமல்!**
**ஒரு நூலைத் திறந்து படித்தால்,**
**அறியாமை என்னும் பூட்டு**
**திறக்கப்பட்டு, அறிவு என்னும்**
**சிந்தனை அழகாய்ச் சிறகடிக்கும்!**

**படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் எழுதுக.**

1. தீங்கானதைச் சிந்தித்தால் தீமையே விளையும்.
2. நல்லதைப் பார்த்தால் நற்பண்பு வளரும்.
3. கல்வியறிவு ஞானத்தைத் தரும்.
4. ஏட்டறிவு உலகைக் காட்டும் கண்ணாடி.
5. எடுத்துப் படிப்போம் ஏற்றம் பெறுவோம்.

**படிவம்**

**4. நூலக உறுப்பினர் படிவம்.**

**விழுப்புரம் மாவட்டம், கண்ணதாசன் நகர், காமராசர் தெரு, 32ஆம் எண் வீட்டில் குடியிருக்கும் முத்துவின் மகன் அமுதன் மாவட்ட மைய நூலகத்தில் நூலக உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை அமுதனாக** எண்ணி, கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

**நூலக உறுப்பினர் படிவம்**

**விழுப்புரம்** மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் **மைய**

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண் : 123 உறுப்பினர் எண் : 45

| | | |
|---|---|---|
| 1. | பெயர் | : மு. **அமுதன்** |
| 2. | தந்தை பெயர் | : **முத்து** |
| 3. | பிறந்த நாள் | : 12 .12. 2007 |
| 4. | வயது | : 15 |
| 5. | படிப்பு | : **10ஆம் வகுப்பு** |
| 6. | தொலைபேசி / அலைபேசி எண் | : 123456789 |
| 7. | முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | : **32, கண்ணதாசன் தெரு, காமராசர் நகர், விழுப்புரம் மாவட்டம் – 600008.** |

நான் **வ.அமுதன்** நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை **ரூ. 100** சந்தா தொகை **ரூ. 100** ஆக மொத்தம் **ரூ. 200** செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என்று உறுதியளிக்கிறேன்.

இடம் : **விழுப்புரம்** தங்கள் உண்மையுள்ள,

நாள் : 12. 04. 22 **வ. அமுதன்**

திரு / திருமதி / செல்வி / செல்வன் **வ. அமுதன்** அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

**பா. கபிலன்**

பிணையாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர்/மேல்நிலைப்பள்ளி/தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

- **மேல்நிலை சேர்க்கை விண்ணப்பப் படிவம்.**

**15, காந்தி நகர், பெரியார் தெரு, விருத்தாசலம் – 10** என்ற முகவரியில் வசிக்கும் **தமிழ்வேந்தன்** என்பவரின் மகள் **பூந்தளிர், அரசு உயர்நிலைப்பள்ளி,**

**விருத்தாசலம், கடலூர் மாவட்டத்தில் 10ஆம் வகுப்பு முடித்திருக்கிறார்.** அதே ஊரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை பூந்தளிராகக் கருதி, கொடுக்கப்பட்ட மேல்நிலை சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

- **விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராக சேருவதற்கான படிவம்.**

**15, நன்மணம் நகர், திருவள்ளுவர் தெரு, திருவள்ளூர் மாவட்டம் – 10** என்ற பகுதியில் குடியிருக்கும் **இளமாறனின்** மகன் **இனியன்** அப்பகுதியில் உள்ள **அரசு மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பு** படித்துக்கொண்டிருக்கிறார். இனியன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை **இனியனாகக்** கருதி, கொடுக்கப்பட்ட **விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராக சேருவதற்கான** சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

- **பணி வாய்ப்பு வேண்டித் தன் விவரப் பட்டியலை விண்ணப்பப் படிவம்.**

**எண் – 15, பாரதிதாசன் நகர், கபிலர் தெரு, அரியலூர் மாவட்டத்தில் வசிக்கும் தமிழரசுவின் மகள் தமிழ்செல்வி, கணினிப் பயிற்றுநர்** பணி வேண்டித் தன்விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர், தன்னை **தமிழ்செல்வியாகக்** கருதிப் பணி வாய்ப்பு வேண்டித் தன் விவரப் பட்டியலை நிரப்புக.

குறிப்பு : **கொடுக்கப்பட்டுள்ள படிவங்களை மீண்டும் மீண்டும் நிரப்பிப் பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்**

## மொழிப்பயிற்சி (நிற்க அதற்குத் தக)

5. **இன்சொல் வழி** நடப்பதால் உண்டாகும் நன்மைகள் எவையேனும் ஐந்தினை எழுதுக.

**பிறர் மனம் மகிழும், அறம் வளரும், புகழ் பெருகும், நல்ல நண்பர்கள் சேருவர், அன்பு நிறையும்.** (அல்லது) **இன்சொல் பேசும் சூழலையும் வன்சொல் பேசும் சூழலையும் பட்டியலிட்டு அவற்றில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது? என்பதைக் குறிப்பிட்டு விளக்குக.**

| இன்சொல் வழி | தீய சொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | புகழ் குறைகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | அன்பு குறையும் |

**இவற்றில் நீங்கள் செல்லும் வழி யாது?**

- நாங்கள் இன்சொல் வழியையே பின்பற்றுவோம்.

**6. அன்றாட வாழ்வில் நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலையைப் பட்டியலிடுக.**

| உதவிகள் | மனநிலை |
|---|---|

| | |
|---|---|
| வகுப்பறையில் உடன் பயிலும் மாணவருக்கு எழுதுகோல் கொடுத்து உதவிய போது | இக்கட்டான சூழலில் செய்த உதவியால் எனக்கு மனநிறைவு; எழுதுகோல் பெற்றவருக்கு மன மகிழ்ச்சி! |
| உறவினருக்கு என் அம்மா பணம் அளித்து உதவிய போது | கடன் பிரச்சினை முடிந்ததால் உறவினருக்கு ஏற்பட்ட நன்றியுணர்வு! |
| பசியோடு வந்த வறியவர்க்கு உணவு வழங்கிய போது | பசிப்பிணி தீர்த்த மனநிறைவு. |

## மொழிபெயர்ப்பு

**7. தமிழில் மொழிபெயர்த்துத் தலைப்பிடுக:**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant. www.tamilthugal.blogspot.com

**இயற்கை**

**கதிரவன் தங்க நிறக் கதிர்களால் இருளை விரட்டி உதிக்கின்றது. வெண் மேகங்கள் வானில் தவழ்கின்றன. வண்ணப்பறவைகள் தங்களுடைய மெல்லிசையை வாசிக்கின்றன. வண்ணத்துப் பூச்சிகள் பூக்களை சுற்றி நடனம் ஆடுகின்றன. மலர்கள் நறுமணத்தைக் காற்றில் பரவவிடுகின்றன. தென்றல் காற்று வீசி இதமான சூழலைத் தருகின்றது.**

## குறிப்பு

**செவிமாற்றுத் திறனார்களுக்கு மாற்றுவினா – உரைப்பத்தியும் ஐந்து வினாக்களும் இடம்பெறும்.**

## எட்டு மதிப்பெண் வினா – விடைகள்.

## உரைநடை

**1. வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவருக்கு உணவிடல் –** இவை போன்ற அன்றைய செயல்கள் குறித்தும் **இக்காலத்தில் விருந்தினருக்குச் செய்யும் விருந்தோம்பல் குறித்தும் விவரித்து எழுதுக.**

- **விருந்துபோற்றுதல்** என்பது தமிழரின் பண்பாடு சார்ந்த பழக்கவழக்கமாக இருந்தது. **முன்பின் அறியாத புதியவர்களை விருந்தினர்களாய்ப் பழந்தமிழர்கள் போற்றினர்.**

- ❖ அன்றும் இன்றும் விருந்தோம்பலில் பின்பற்றபட்ட முறைகளைக் குறித்துக் காண்போம்.

**வீட்டில் திண்ணை அமைத்த காரணம்**

- ❖ பண்டைய தமிழர் தமது இல்லத்திற்கு முன்புறம் புதிதாக வருவோர் யாராயினும் இரவில் தங்கிச் செல்வதற்கும் பகலில் ஓய்வெடுத்துச் செல்வதற்கும் திண்ணையும் அவர்கள் தலை வைத்துக்கொள்ளத் திண்டும் வைத்துக் கட்டினர்.

**விருந்தினர் பேணுதல்**

- ❖ விருந்தினரைப் பேணுதல் என்னும் பழக்கம் **பழந்தமிழர் மரபு** என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் அழகுற எடுத்துரைக்கின்றன. வறுமை போன்ற பல்வேறு துன்ப நிலைகளிலும் விருந்து போற்றியவர்கள் தமிழர் என்பதையும் அவை பாடுகின்றன.

**தமிழர் பண்பாட்டில் ஈகை**

- ❖ **முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி, மயிலுக்குப் போர்வை கொடுத்தான் பேகன்** என்றெல்லாம் பழந்தமிழரின் ஈகை குணத்தைக் குறித்து தமிழ் இலக்கியங்கள் வழி அறிகிறோம்.

**பசித்தவருக்கு உணவிடல்**

- ❖ **பசியைப் பிணி** என்றும், **உணவு அளித்தல் என்பது உயிர் தருவது** என்றும் பழந்தமிழர் வாழ்ந்தனர் என்றெல்லாம் அறிகிறோம். **பசித்தவருக்கு உணவிடல்** என்ற பண்பு **தமிழரின் உயரியப் பண்புகளில் ஒன்றாகும்.**

**இக்காலத்தின் விருந்தோம்பல்**

- ❖ **வீட்டிற்கு முன்புறம் திண்ணை வைத்துக் கட்டும் பழக்கம் இன்று இல்லை.**
- ❖ **முன்பின் அறியாதவர்களை விருந்தினர்களாய் இன்று ஏற்பதில்லை.**
- ❖ **உறவினர்கள், நண்பர்கள்** மற்றும் **அறிந்தவர்களை** மட்டுமே விருந்தினராய்ப் போற்றும் நிலை ஏற்பட்டுள்ளது.
- ❖ இல்ல விழாக்களும் திருமண மண்டபங்களில் ஏற்பாட்டாளர்களின் பொறுப்பிலேயே நடைபெறுகின்றன. காலமாற்றம் தமிழர்ப் பண்பாட்டில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.
- ❖ **ஈகை, பசித்தவருக்கு உணவிடல், விருந்துபோற்றுதல் போன்ற தமிழரின் உயர்குணங்கள் இன்றும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே இன்றைய தேவையாகும்.**

**2. நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர்களின் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்'** என்ற தலைப்பில் **மேடை உரை** எழுதுக.

# மாணவரும் நாட்டுப் பற்றும்

**அனைவருக்கும் வணக்கம்.**

மாணவர்களுக்கு நாட்டுப்பற்று மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். நாட்டு விழாக்கள் மற்றும் விடுதலைப் போராட்ட வரலாறு போன்றவற்றை அறிந்துகொள்வது வழியாக நாட்டுப்பற்றை வளர்க்க முடியும் என்பதைக் குறித்து இங்கு உரையாற்ற விரும்புகிறேன்.

**நாட்டு விழாக்கள்**

- நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் நமதிரு கண்கள். ஒருவருக்குத் தமது தாய் நாட்டின் மீதுள்ள அளவில்லாத அன்பும் பெருமிதமுமே நாட்டுப்பற்று.
- மாணவப் பருவத்திலேயே நாம் நாட்டுப் பற்றுடன் திகழவேண்டும் என்பதே என் விருப்பம்.
- விடுதலை நாள், குடியரசு நாள், காந்தி பிறந்தநாள் என்று நாம் பல விழாக்களைக் கொண்டாடுகிறோம். குறிப்பிட்ட விழா நாள்களில் மட்டுமே அதற்குக் காரணமானவர்களை நினைவு கூர்ந்தால் போதுமா? இனிப்புகளைக் கொடுப்பதால் மட்டும் பயன் உண்டா? போன்ற வினாக்களை எழுப்பி, நாம் சிந்திக்க வேண்டும்.

**விடுதலைப் போராட்ட வரலாறு**

- இருநூறு ஆண்டுகள் நம்நாடு ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்தது. நாட்டு விடுதலைக்காக எண்ணற்ற வீரர்கள் தங்கள் இன்னுயிரை ஈந்தனர்.
- **காந்தியடிகள், நேதாஜி, திலகர், நேரு, லால் பகதூர் சாஸ்திரி** போன்ற தலைவர்கள் இந்திய அளவிலும், **சுப்பிரமணிய சிவா, வ.உ.சி., முத்துராமலிங்கத் தேவர், திருப்பூர் குமரன்** போன்ற தலைவர்கள் தமிழக அளவிலும் நாட்டு விடுதலைக்காகப் போராடினர்.
- பல்லாயிரக்கணக்கானோரின் எழுச்சி மிகுந்த போராட்டத்தின் பயனாக 1947ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் பதினைந்தாம் நாள் நாடு விடுதலை அடைந்தது.
- அரும்பாடுபட்டு பெற்ற விடுதலையைப் பேணிக் காப்பது நமது கடமையல்லவா?

**நாட்டு முன்னேற்றத்தில் மாணவர்களின் பங்கு**

- விடுதலை பெற்றுவிட்டோம் என்று இன்புற்றிருந்தால் மட்டும் போதாது.
- இந்திய நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கான முயற்சிகளை இளைஞர்கள் மேற்கொள்ள வேண்டும்.
- கல்லாமை என்னும் இருள் இல்லாமல் போக அனைவரும் கல்வி கற்க வேண்டும்.

- ❖ அனைத்துத் துறைகளிலும் நாட்டுநலனை மட்டுமே கருத்தில் கொண்டு சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்
- ❖ முதலில் வீட்டின் முன்னேற்றத்திற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் ஆர்வத்துடன் பணியாற்ற வேண்டும்.
- ❖ நாட்டு மக்கள் அனைவருக்கும் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காகக் கடமையாற்ற வேண்டும். அதற்கான தொடக்கப் பணியை மேற்கொள்ள மாணவர்களாகிய நாம் இன்றே உறுதி ஏற்போம் என்பதே இந்த உரையின் மையக் கருத்தாகக் குறிப்பிடுகிறேன். நன்றி! வணக்கம்!

2. **ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.**

***ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழ்!***

***முல்லை வார இதழில்***
***வெளிவருகிறது! ... உள்ளே!...***

- ➢ *எதற்காக எழுதுகிறேன் !*
- ➢ *ஜெயகாந்தனின் மறுமுகம் !*
- ➢ *பரிசு பெற்ற கதைகள் !*
- ➢ *விருதும் ஜெயகாந்தனும்!*
- ➢ *கவிதை தெரியுமா?*
- ➢ *திரைப்படத்துறை !*
- ➢ *இதழியல் பணி!*
- ➢ *விடுத்த கேள்விகள்!*
- ➢ *கொடுத்த விடைகள் !*
- ➢ *நேருக்கு நேர் !*

***"ஜெயகாந்தம்"***
***நினைவுச்***
***சிறப்பிதழ்!!!***

***இந்த வாரம் முதல் உங்கள் கைகளில் !!!...***

***ஜெயகாந்தன் நம் மனதோடு பேசுகிறார் !!!...***

***வாங்குவீர் முல்லை வார இதழை!!!... படிப்பீர் ஜெயகாந்தனை!!!...***

www.tamilthugal.blogspot.com

## துணைப்பாடம் – விரிவானம்

1. **அன்னமய்யா** என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் **கோபல்லபுரத்து மக்கள்** கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**அன்னமய்யாவும் புதிதாக வந்தவனும்:**

- ❖ "அன்னமய்யா யாரோ ஒரு சாமியாரை இழுத்துட்டு வாரான்" என்றான் சுப்பையா. புதிதாக வந்தவனைப் பார்த்தால் அவனது தாடியும் அழுக்கு ஆடையும் தள்ளாட்டமும் அவனை வயோதிகனாக நினைக்க வைத்தது.
- ❖ அருகில் போய் பார்த்த பிறகுதான் அவன் ஒரு வாலிபன் என்று தெரிந்தது. பசியால் அவனது முகம் வாடி இருந்தது. அவன் அன்னமய்யாவைப் பார்த்ததும் சிறு புன்னகை காட்டினான்

**அன்னமய்யாவின் அக்கறை:**

- ❖ அன்புப் புன்னகை காட்டிய புதியவனைப் பார்த்துக்கொண்டே இருந்தான் அன்னமய்யா. குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா? என்று அவன் தமிழில் பேசியது அன்னமய்யாவிற்கு ஆச்சரியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.
- ❖ நிலத்தில் களை எடுக்கும் வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்களிடம் நீச்சுத் தண்ணி வாங்கிட்டு வரட்டுமா? என்று அன்னமய்யா கேட்டான். புதிதாக வந்தவன் நாமே அங்கு போய்விடலாமே என்பது போல் பார்த்தான்.
- ❖ அவன் எழுந்திருப்பதற்காக அன்னமய்யா கையை நீட்டினான். அதை நன்றியுடன் மறுத்துவிட்டு, சிரமப்பட்டுத் தானே எழுந்து கொண்டான்.

**அன்னமய்யாவின் விருந்தோம்பல் :**

- ❖ கறுப்புக் கலயங்கள் கரிசல் மண் தரையில் பாதி புதைக்கப்பட்டிருந்தன. அன்னமய்யா ஒரு கலயத்தின்மேல் உள்ள கல்லை அகற்றினான். கொள்ளுத் துவையலும் ஊறுகாயும் இருந்த சிரட்டையே அந்தக் கலயத்தின் வாய் மூடியாகவும் இருந்தது.
- ❖ சிரட்டையில் நீத்துபாகத்தை வடித்து அவனிடம் நீட்டி, "சும்மா வாய்வைத்துக் குடிங்க" என்றான். அவன் உறிஞ்சும்போது கண்கள் சொருகி மிடறு தொண்டை வழியாக இறங்குவதன் சுகத்தை அவன் முகமே சொல்லியது.

**அன்னமய்யாவின் பெயர்ப்பொருத்தம்:**

- ❖ கலயத்திலிருந்து சிரட்டை வழியாக மடக்கு மடக்காய் அவனுடைய வயிற்றுக்குள் அந்த நீச்சுத்தண்ணீர் நிறைந்தது. புதிதாக வந்தவனுக்கு பசி நீங்கிய நிறைவு ஏற்பட்டது. அதை விட மேலான மனநிறைவு அன்னமய்யாவுக்கு ஏற்பட்டது.
- ❖ புதிதாக வந்தவன் அன்னமய்யாவிடம் உன் பெயரென்ன என்றான். அன்னமய்யா தன் பெயரை அன்னமய்யா என்று கூறினான்.
- ❖ வந்தவன் **அன்னமய்யா** என்ற அந்தப் பெயரை மனதுக்குள் சொல்லிப் பார்த்து, **இந்தப் பெயர் அவருக்கு எவ்வளவு பொருத்தம்!** என்று நினைத்துக்கொண்டான்.

2. 'அழகிரிசாமியின்' **ஒருவன் இருக்கிறான்** சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து விவரித்து எழுதுக.

**மனிதநேயம் கொண்ட கதைமாந்தர் – வீரப்பன்**

- **வீரப்பன்** என்பவன் காஞ்சிபுரத்தில் விறகுக்கடையில் வேலை செய்து வந்தான். அவன் வறுமை நிலையில் இருந்தாலும் அவன் **நண்பன் குப்புசாமி** மீது மிகுந்த பாசம் வைத்திருந்தான்.
- குப்புசாமிக்குத் தாய் தகப்பன் கிடையாது. உறவுகள் இருந்தாலும் அவனைப் பார்த்துக் கொள்ள ஆளில்லை. தன் வறுமையிலும் நண்பனுக்கு உதவும் மனிதநேயத்தைப் பெற்றவன் வீரப்பன் என்பதை **ஆசிரியர் அழகிரிசாமி** இக்கதை வழியாக அழகுற வெளிப்படுத்துகிறார்.
- குப்புசாமியும் வீரப்பனும் எதிரெதிர்க் கடைகளில் வேலை செய்து வந்தனர். இருவரும் நெருங்கிய நண்பர்கள். குப்புசாமி நோய்வாய்ப்பட்டு வேலையை இழந்த பொழுது வீரப்பன்தான் கடன் வாங்கி உதவி செய்தான்.
- **இப்படியும் ஒரு நட்பா! இவன் உயிருக்கு இவ்வளவு மதிப்பு கொடுக்கிற ஓர் உறவும் இவ்வுலகில் உண்டா!** என்று எண்ணுமளவுக்கு அவர்கள் நட்பு இருந்தது.
- ஒரு நாள் வீரப்பன் பட்டணத்தில் தங்கியிருந்த குப்புசாமிக்கு மூன்று ரூபாயும் ஒரு கடிதமும் **ஆறுமுகம்** என்பவனிடம் கொடுத்தனுப்பினான்.
- அந்தக் கடிதத்தில் வீரப்பன், **"என் உயிர் நண்பன் குப்புசாமிக்கு எழுதிக் கொண்டது. உனக்காக நான் தினமும் கோவிலுக்குப் போய் கும்பிடுகிறேன். எனக்கு இப்பொழுது வேலையில்லை. உன்னைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை உள்ளது. ஆனால் என்னிடம் இருக்கின்ற மூன்று ரூபாய் பணத்தை வைத்துக் கொண்டு பேருந்தில் பயணம்தான் செய்ய முடியும். அதனால்தான் உன்னைப் பார்க்க வரவில்லை. அந்தப் பணத்தைக் கொடுத்து அனுப்பியுள்ளேன். எனக்குப் பணம் கிடைத்தால் உன்னை வந்து பார்ப்பேன்."** என்று எழுதியிருந்தான்.
- உலகமே வெறுத்து ஒதுக்கிய குப்புசாமியிடம் உயிரையே வைத்திருக்கும் அன்பின் வடிவாய் ஒருவனாய் இருக்கும் வீரப்பன் என்ற கதைமாந்தரை **ஒருவன் இருக்கிறான்** என்ற இக்கதையில் அறிகிறோம்.
- குப்புசாமிக்கும் ஒருவன் இருக்கிறான். **குப்புசாமிக்கு மட்டுமா? ஒவ்வொருவருக்கும் உண்மையான நட்போடு ஒருவர் இருப்பார்** என்பதை இக்கதைவழி அறிகிறோம்.

**3. 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே'** என்கிறது **வெற்றி வேற்கை.** மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

**குறிப்புச் சட்டகம்**

- **முன்னுரை**
- **வாடிய மனம்**
- **புதிய நம்பிக்கை**
- **கல்விச்சுடர்**
- **உதவிக்கரம்**
- **கல்வியின் சிறப்பு**
- **முடிவுரை**

**முன்னுரை:**

**"உன்னால் படிக்க முடியாது"** என்று ஒருவர் கூறியது, எவ்வாறு ஒரு சிறுமியின் வாழ்க்கையையே புரட்டிப் போட்டது என்பதை இக்கதையின் வழியாகக் காணலாம்.

**வாடிய மனம்**

- **சாம் – பாட்ஸி** என்ற இணையருக்கு மகளாக அமெரிக்காவில் பிறந்தவள் **மேரி ஜேன்.** மேரியின் குடும்பம் பருத்திக்காட்டில் வேலை செய்து வாழ்க்கை நடத்தியது.
- ஒரு நாள் மேரியும் அவள் தாயும் **வில்ஸன்** என்பவருடைய வீட்டிற்குச் சென்றனர்.
- அங்கு வில்ஸனின் இளைய மகள், மேரி எடுத்த புத்தகத்தைப் பிடுங்கிக் கொண்டாள்; **உன்னால் படிக்க முடியாது** என்றும் கூறினாள்.
- **புத்தகத்தை எடுக்காதே** என்ற அந்த வார்த்தை மேரியை ஆழமாகத் தாக்கியது. மேரி மிகவும் மனம் வாடினாள்.

**புதிய நம்பிக்கை**

- பதினொரு வயதான மேரி, படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தனக்குள் வளர்த்துக் கொண்டாள். **"உன்னைப் போன்ற குழந்தைகள் படிக்க வேண்டும்"** என்று **ஆசிரியர் மிஸ் வில்ஸன்** கூறினார்.
- மேரிக்குப் **புதிய நம்பிக்கை** பிறந்தது. அந்தத் தலைமுறையில் படிக்கப் போகும் முதல் ஆளும் அவள்தான் என்ற மகிழ்ச்சி பிறந்தது.

**கல்விச்சுடர்**

- மேயெஸ்வில்லி பகுதிக்குப் போய்ப் படிக்க, மேரி நீண்ட தூரம் நடந்து சென்றாள். ஆனாலும் பள்ளியில் ஆர்வத்துடன் படிப்பைக் கற்றுக்கொண்டாள்.
- இவ்வாறு ஆர்வத்தோடு படித்து முடித்த மேரிக்கு, சில ஆண்டுகள் கழித்து, பட்டமளிப்பு விழா நடைபெற்றது. மேரி **பட்டயச் சான்றிதழைப் பெறும்போது மேரி மட்டுமல்ல, மேயெஸ்வில்லி பகுதி மக்களும் பெருமகிழ்ச்சி அடைந்தனர்**.

**உதவிக்கரம்**

- ❖ மிஸ் வில்ஸன், **"வெள்ளைக்கார பெண்மணி ஒருவர், ஒரு கருப்பினக் குழந்தையின் படிப்பிற்குப் பணம் அனுப்பி இருக்கிறாள்"** என்றும் **"நீ தேர்வு செய்யப்பட்டுள்ளாய்; படிப்பதற்கு டவுனுக்குச் செல்ல வேண்டும்"** என்றும் கூறினார். மேரி தன் மகிழ்ச்சியை எல்லோரிடமும் பகிர்ந்து கொண்டாள்.

**கல்வியின் சிறப்பு**

- ❖ மேரியை வழியனுப்ப பலரும் வந்தனர். மேரி, புகைவண்டியில் ஏறி, டவுனுக்குச் சென்றபோது கூடியிருந்தவர்கள் வாழ்த்தி அனுப்பினர்.
- ❖ அனைவரும் மேரியை வாழ்த்தியது **'கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'** என்பதைக் காட்டியது.

**முடிவுரை**

- ❖ **"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே"** என்ற தொடர் மேரியின் வாழ்விற்குப் பொருத்தமாக உள்ளது. பிறரிடம் உதவி பெற்றாயினும் கல்வி பெறுவதே முக்கியம் என்பதை இக்கதையின் வழியாக அறியலாம்.

4. **இராமானுஜர் நாடகம் வழியாக வெளிப்படும் மனிதநேயம் சார்ந்த அறக்கருத்தை விவரித்து எழுதுக.**

- ❖ **இராமானுஜர்,** திருமந்திரத் திருவருளைக் கற்றுக் கொள்வதற்காகப் பதினெட்டு முறை பூரணரைச் சந்திக்கச் சென்றார்.
- ❖ பூரணர், இராமானுஜரைத் **தண்டு கொடியுடன்** மட்டும் வாருங்கள் என்று கூறுகிறார். வேறு யாரையும் அழைத்து வரக் கூடாது என்றும் கூறுகிறார்.
- ❖ தன்னுடனேயே இருக்கும் **கூரேசரையும், முதலியாண்டானையும் உண்மையான நட்புடன் நேசிக்கிறார் இராமானுஜர்.** அதனால் திருவருளைக் கற்கப் போகும் பொழுதும்கூட பூரணரின் சொல்லை மீறி அவர்களையும் தன்னுடன் அழைத்துச் செல்கிறார்.
- ❖ இப்பிறவியில் **பிறவிப் பிணியைத் தீர்க்கும் அருமருந்தான திருமந்திரத்தைக்** கற்றபின் அம்மந்திரத்தைத் தன்னலமாகத் தான் மட்டும் வைத்துக்கொள்ளாமல் மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்று விரும்பினார்.
- ❖ **திருமந்திரத் திருவருளை வெளியில் சொன்னால் நரகத்திற்குத்தான் செல்வோம்** என்று அறிந்திருந்தார் இராமானுஜர், ஆனாலும் இத்தனை **மக்களுக்கும் அதனைக் கற்றுக்கொடுத்து** அவர்களை நரகத்தில் இருந்து காத்த பெருமகிழ்ச்சியைப் பெற்றார்.

- இராமானுஜரின் இந்த மனிதநேயச் செயலைப் புரிந்துகொண்ட பூரணர் அவரை **எம்பெருமான்** என்று அழைத்து மகிழ்ந்தார். தமது மகன் சௌம்ய நாராயணனையும் இராமானுஜரிடம் அடைக்கலமாகத் தந்தார்.
- இராமானுஜர் நாடகம் வழியாக அவரது **மனிதநேயப் பண்பையும் பிறருக்கு நல்லது செய்யும் பண்பே சிறந்த அறம்** என்பதையும் அறிந்துகொள்ளலாம்.

## பொதுக்கட்டுரை

**1. உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்கு நீங்கள் சென்று வந்த நிகழ்வைக் குறித்துக் கட்டுரை எழுதுக.**

**குறிப்புச் சட்டகம்**

- **முன்னுரை**
- **அரசு பொருட்காட்சிக்கான இடமும் அமைப்பும்**
- **பல்வகை அங்காடிகள்**
- **உணவுக் கூடங்கள்**
- **போக்குவரத்துத் துறை**
- **விளையாட்டு அமைவிடங்கள்**
- **முடிவுரை**

**முன்னுரை**

எங்கள் ஊரில் நடைபெற்ற **அரசுப் பொருட்காட்சியில்** நாங்கள் கண்டு களித்த **பொருள்கள், அரங்குகள், நிகழ்வுகள்** போன்றவை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**அரசு பொருட்காட்சிக்கான இடமும் அமைப்பும்**

- எங்கள் ஊரின் பரந்த வெளிப்பகுதியில் **அரசு பொருட்காட்சி அரங்குகள்** அமைக்கப்பட்டு இருந்தன.
- அங்கு பல்வகைப் பிரிவுகளில் வண்ணமயமான அரங்குகள் வடிவமைக்கப்பட்டு இருந்தன. நாங்கள் மகிழ்ச்சியோடு நுழைவுச் சீட்டு வாங்கி உள்ளே சென்றோம்.

**பல்வகை அங்காடிகள்**

- பொருட்காட்சியில் பல்வேறு வகையான அங்காடிகள் அமைக்கப்பட்டிருந்தன.
- **போக்குவரத்துத் துறை, சுற்றுலாத்துறை, மீன்வளத்துறை, உணவு அரங்குகள், விளையாட்டு அமைவிடங்கள்** போன்ற பல்வேறு வகையான அரங்குகளைக் கண்டு களித்தோம்.

**உணவுக் கூடங்கள்**

உணவுக் கூடங்களில் பல்வேறு விதமான உணவுகள் வைக்கப்பட்டிருந்தன. **இனிப்பு வகைகள், பஜ்ஜி, பெரிய அப்பளம், பனிக்கூழ்** போன்ற உணவுகள் நிறைந்திருந்தன.

**போக்குவரத்துத் துறை**

- ❖ அரசு சார்பாக அமைக்கப்பட்டிருந்த போக்குவரத்துத் துறை அரங்கு எங்களை மிகவும் மகிழ்ச்சிக்கு உள்ளாக்கிது. அதில், **பேருந்துகள் அமைவிடம் மற்றும் வழித்தடங்கள்** குறித்து காட்சிபடுத்தப்பட்டிருந்ததைக் கண்டு வியந்தோம்.
- ❖ **சாலை விதிகள் மற்றும் சாலைப் பாதுகாப்பு** குறித்த ஏற்பாடுகள் எங்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தின.

**விளையாட்டு அமைவிடங்கள்**

- ❖ குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் விளையாடும் **பெரிய ராட்டினம், குடை ராட்டினம், சிறுவர்களுக்கான தொடர்வண்டி** போன்ற பல்வேறு விளையாட்டுகள் எங்களை உற்சாகப்படுத்தின.
- ❖ மாலை நேரத்தில் அங்கு நடைபெற்ற கண்கவர் வண்ணக்கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தோம்.

**முடிவுரை**

- ❖ **மீண்டும் ஒருமுறை பொருட்காட்சிக்கு வர வேண்டும் என்ற ஆவலோடு நாங்கள் அங்கிருந்து வெளியேறினோம்.**

**2. குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக.**

<u>**குறிப்புகள்**</u> : முன்னுரை– இயற்கையோடு வாழ்வோம் – காற்று மாசு – மழைநீரைச் சேமிப்போம் – மரங்களை வளர்ப்போம் மண்வளம் காப்போம்– முடிவுரை.

www.tamilthugal.blogspot.com

**குறிப்புச் சட்டகம்**

- ❖ **முன்னுரை**
- ❖ **இயற்கையோடு வாழ்வோம்**
- ❖ **காற்று மாசு**
- ❖ **வானத்து மழைநீரைச் சேமிப்போம்**
- ❖ **மரங்களை வளர்ப்போம் மண்வளம் காப்போம்**
- ❖ **முடிவுரை**

**முன்னுரை**

சுற்றுச்சூழலைப் பாதுகாத்து வாழ்வது என்பது தற்காலத்தில் அனைவருக்கும் இன்றியமையாத கடமைகளில் ஒன்றாகும். **காற்று, மழை, மரம்** போன்ற இயற்கை வளங்களைப் பாதுகாப்பது குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**இயற்கையோடு வாழ்வோம்**

- ❖ மனிதர்களும் இயற்கையும் இணைந்து வாழ்வதே நடைமுறை வாழ்வியல் முறையாகும்.
- ❖ இயற்கையைப் பாதுகாத்து, அதனை மாசுபடுத்தாமல் இயற்கையோடு இயைந்து வாழக் கற்றுக்கொள்வோம்.

**காற்று மாசு**

- ❖ **காற்று மாசடைந்தால்** மனிதருக்கும் விலங்குகளுக்கும் சுவாசித்தலில் சிக்கல் ஏற்படுகின்றது. மேலும் பல்வேறு நோய்கள் தோன்றுவதற்கான வழியாகவும் அமைகின்றது.
- ❖ சுற்றுச்சூழல் முழுவதும் மாசடைந்த நிலை ஏற்படுவதற்கான இன்றியமையாத காரணம் காற்று மாசடைவதே ஆகும்.
- ❖ **ஊர்திகள், தொழிற்சாலைகள்** போன்றவை வெளியிடும் புகை போன்றவற்றால் காற்று மாசடைவதைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

**மழைநீரைச் சேகரிப்போம்**

- ❖ வானத்துக் கொடையான மழைநீரைப் பூமியில் சேமிக்க வேண்டும். **மழைநீரை வீணாக்காமல் நிலத்தடி நீராக மாற்றி நீர்வளம் காக்க வேண்டும்.**
- ❖ மழைநீர் வடிகால்களையும் உருவாக்கிட நிலத்தடியில் மழைநீரைச் சேமிக்க வேண்டும். நீர்நிலைகளைத் தூர்வாரி மழைநீரை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

**மரங்களை வளர்ப்போம் மண்வளம் பெறுவோம்**

- ❖ மழை பெறுவதற்கான ஆதாரங்களான மரங்களை வளர்த்துப் பசுமையைப் பேண வேண்டும்.
- ❖ **வறட்சியான பகுதிகளில் மரக்கன்றுகளை நட்டு மரங்களை வளர்த்து மழையைப் பெற்று மண்வளம் பெருக்க வேண்டும்.**

முடிவுரை

- ❖ இயற்கையைப் பாதுகாத்துச் **சுற்றுச்சூழலைப் பேணுவோம்.** வருங்காலத் தலைமுறையினர் இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ வழி செய்வோம்.

# திருக்குறள் – மனப்பாடப்பகுதி

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். தமிழ்த்துகள்

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.